செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௧, மாசி	பரல்
௩௪	மார்ச், 1960	௭

அஞ்சல் தலையும் திருவள்ளுவரும்

நம் இந்தியப் பேரரசினர், பெரியார் பலர் பல ஆண்டுகளாக வேண்டிக் கொண்டதன் மேல் 15—2—1960 இல் திருவள்ளுவர் திருவுருவத்தினை அஞ்சற்றலையில் பொறிப்பித்து வெளிப்படுத்தியுள்ளார்கள். இது மகிழ்ச்சி தருவதாயினும் அதில் வந்த உருவம் சரியா என்பதுதான் இங்கே ஆராயவேண்டுவது.

உலகத்தில் தமிழ்மொழி யொன்றே மிக்க தொன்மை வாய்ந்ததும் வரலாற்றுக் காலத்துக்கு முந்தியதுமாகும். வரலாற்றுக் கெட்டாத பலஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே இலக்கண இலக்கியச் செம்மையுடைத்தாகத் தொடர்ந்து வருகின்றது. தனித்தியங்கும் ஆற்றலுள்ளது. இயற்கையும் இனிமையும் வாய்ந்தது. இதன்கண் திருவள்ளுவநாயனார் அருளிச் செய்த 'திருக்குறள்' உலகப் பொதுமறையாகத் திகழ்கின்றது. இது தனித்தமிழ் மறையாகும். தமிழும் சிவமும் உடலும் உயிரும் போல் பண்டுதொட்டு உடங்கியைந்து வரும் பண்புடையன. திருக்குறள் உலகப் பொதுமறையாவது போன்று சிவநெறியும் உலகப் பொதுநெறியேயாம். சிவநெறியின் மிகப் பழங்காலக் கோட்பாடு 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும், நன்றே நினைமின்' என்பதாம். சிவவழிபாட்டினர் தெய்வநினைவுக் குறியாகக் கொண்டு வழிபட்டு வருவது அருவுருவப் பிழம்பாகும். கட்புலனாவதும் கையாற் பற்றப்படாததும் ஆகிய தீப்பிழம் போன்றே அருவுருவ வழிபாட்டிற்கு ஏற்புடைத்தாகும். சிவன் தீவண்ணன் என்பதும் இதனை வலியுறுத்தும். இவ்வொளி வழிபாடாகிய சிவவழிபாடும், அதன் சிறப்படையாளமாகிய எரிந்து

எஞ்சிய சாம்பற் பூச்சும் தமிழகத்துக்கே யுரிய தொன்மையவாம் என்க.

பின்னர் இவ்வொளி வழிபாடு கையாற் பற்றப்படக் கூடிய சிவலிங்க வழிபாடாகத் திகழ்ந்தது. அக்காலத்தும் அதனை ஒளியின் அடையாளமாகவே நிறுவினர். அதற்குச் செம்பொற் றாண் எனத் திருப்பெயரமைத்து வழிபட்டனர். அப்பொழுதும் அருவுருவ வழிபாட்டுக் கோட்பாட்டினின்றும் அகலவில்லை. சிவக்குறி கட்புலனாவதும், கையாற்பற்றப்படுவதுமாக இருப்பினும் திணைபால் குறிக்கப்படும் நிலைமையின் இல்லாமையால் அருவுருவமேயாம். அருவ வழிபாடும் அப்பால் வழிபாடும் சொல்லும் செயலும் நினைவுங் கடந்தனவாம். உருவ வழிபாடு பொதுமை நீங்கிச் சமயத் தனியுரிமை வாய்ந்ததாகும். பொதுமையாயுள்ள அருவுருவ வழிபாடே பொதுமைப் பண்பமைந்த பொதுமறை யருளிய திருவள்ளுவ நாயனாருக்குரியதாவதோர் அமைவுடைத் தென்று கொள்ளுவதில் எவருக்கும் மறுப்போ ஐயமோ இருப்பதற்கில்லை. ஒரு நெறிக்குரியராகவிருந்தே நெறிப்பிணக்கின்றிச் சிறந்து பொதுமையாக வாழ்தல் சிவநெறிக்கேயுரிய தென்பது அந்நெறியின் உண்மையினை உணர்ந்தவர்க்கு நன்கு தெரியும். அந்நெறியின் கோட்பாடுகள் தொகையான் இரண்டும், வகையான் மூன்றும், விரியான் நான்கும், மறையான் ஐந்துமேயாம். தொகை: "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்." வகை: இறை, உயிர், தளை. விரி: செய்வான், செய்வினை, அதன் பயன், சேர்ப்பான். மறை: திருவைந்தெழுத்து. இக் கோட்பாடுகள் முற்றும் திருவள்ளுவர் அருளிய திருக்குறளின்கண் பரக்கக் காணலாம். அதனால் அப் பெருந்தகையாரை அத்தகைய சீரிய செந்நெறிக் குரியவரெனக் கொள்வதில் எவர்க்கும் எத்தகைய தடையும் ஏற்படுவதற்கிடமிருக்காதல்லவா? மேலும் எல்லா நாகரிகமும் வளர்ந்து ஓங்கிச் சிறந்த தமிழகத்துத் தொன்னெறிக்குரியவர் தமிழகத்துத் தோன்றிய சான்றாண்மை மிக்க திருவள்ளுவர் எனக் கூறாது, வந்தேறியவர் பரப்பிய பின்னெறிக்குரியவர் எனக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? நடுநின்று நன்காய்ந்து கூறுமின். அல்லது திருவள்ளுவர் ஒரு நெறியும் இல்லாதவரெனத் துணிந்து கூற எவரேனும் ஒருப்படுவரா?

சென்னைக் கோநகரின் சீரிய இடமாகத் திகழும் திருமயிலாப்பூரில் திருவள்ளுவநாயனாருக்கு அழகிய கற்சிலையும் தனிக் கோவிலும் உள்ளன. அவர் தம் வாழ்க்கைத் துணைவியராம் வாசுகி அம்மையார்க்கும் அக் கோவிலின் திருச்சுற்றிலேயே கற்சிலையும் தனிக் கோவிலும் உள்ளன. பண்டுள்ள இலுப்பை மரம் ஒன்று கோயின்மரம் போன்றமைந்துள்ளது. அதன் காலப் பழமையால்

அது பட்டுப்போனாலும் அதனைத் தகடு பொதிந்து போற்றி வருகின்றனர். ஆராய்ச்சியாளர் அக்கோவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருக்கவேண்டுமென்று கருதுகின்றனர். அக்கோவிலில் திருவள்ளுவருக்கு நாள் வழிபாடும் திருவிழாவும் நிகழ்கின்றன. திருவிழாவுக்குரிய செம்பொன் உருவங்களும் இருக்கின்றன. திருவள்ளுவ நாயனாரின் திருவுருவச் சிறப்பினையும், திருவிழாச் சிறப்பினையும் விளக்கக் கூடிய பல பாடல்களமைந்த வெளியீடுகளும் உண்டு. திருவள்ளுவநாயனாரின் நினைவுத் திருநாளைப் பஞ்சாங்கங்களில் சைவ நாயன்மார் வரிசையிலேயே பல்லாண்டுகளாகப் பொறித்து வருகின்றனர். திருவள்ளுவ நாயனார் செந்நெறிக்குரியராயிருந்தே எல்லா நெறியினரும் மாறுபாடின்றி ஏற்றுக்கொள்ளக் கூடிய உலகப் பொது மறையினை அளித்தமை, அவர்தம் தெய்வப்பெற்றியினையும் அவர் மேற்கொண்டொழுகிய தென்னகச் செந்நெறித் தனிமாண்பினையும் விளக்குவதாகும்.

எடுத்துக் காட்டாக அண்மையில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த தாயுமானச் செல்வரும் சைவச் செந்நெறிக்குரியராயிருந்தே 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை' எனப் பொதுமையும் புகன்றனர். நூறு யாண்டுகளுக்கு முன் வாழ்ந்த வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளாரும் சைவச் செந்நெறிக்குரியராயிருந்தே 'சமரச சன்மார்க்கம்' வகுத்தனர். காந்தியடிகளாரும் தமக்குரிய செந்நெறிக்கண் நின்றே பொதுண்மையுறக் கூட்டு வழிபாடு (பசனை) செய்து சமரசம் நிலைநாட்டியுள்ளனர். இடையறாது இராம நாமத்தினை மேற்கொண்டு வந்தனர் அவர். ஒரு நெறிக்குரியராயுள்ள காரணம்பற்றி அவர் அறவுரைகளை உலகம் கொள்ளாது தள்ளிவிட்டதா? அல்லது அவர் ஒரு நெறியினையும் சார்ந்தவரல்லர் என உலகம் கூறி மறுக்கின்றதா? எண்ணிப்பார்மின். தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களும் சைவச் செந்நெறிக்குரியராயிருந்தே பொதுமையும் சமரசமும் புகன்று வந்தனர். இவ்வாற்றால் திருவள்ளுவநாயனாரும் வாழ்ந்திருப்பார் என்று கொள்வதில் வரும் தடை யாது? சிந்தித்துப் பார்மின்.

கற்பனையுருவே யெனினும் முன்னோர் கைக்கொண்டு போற்றி வருவதற்கு மாறாக மற்றொரு கற்பனை உருவினைப் படைத்தல் முறைமைக்குப் பொருந்துமா என்பதனைச் சிந்தித்துப்பார்மின். 'திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கட்கும், வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளார்க்கும், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்கட்கும் நிழலுருவங்களில்லாதிருந்தும் கற்பனையுருவங்கள் அம்மூவர்க்கும் அமைத்

துக் கைக்கொண்டு வருகின்றனர். அவற்றைக் கற்பனையென்று கழித்து எவரேனும் புதிது படைக்க முற்படுவரோ? கூறுமின். இதுபோன்று ஆயிரம் ஆண்டுக்கு மேலாக நால்வர் முதலாயுள்ள நாயன்மார்கட்கும், ஆழ்வாராதியர்கட்கும், தொன்மை மடாதிபர் கட்கும், வேந்தர், மன்னர். புரவலர், புலவர், பாணர், பாடினியர் முதலியோர்கட்கும் அமைக்குஞ் சிலையுருவங்கள் தொடக்க முதல் இன்றுவரை யாண்டும் மாறுது தொடர்ந்து ஒன்றுபோ லிருந்து வருவனவுங் காண்க. இவற்றையும் மாற்ற முற்படுவர் போலும்.

திருக்குறள் என்னுந் தெய்வத் தமிழ்மறை நூலின் பலபதிப் புக்கள் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு மேலாகப் பெரியார் பல ராலும் வெளிவந்துள்ளன. அவ்வவற்றினெல்லாங் காணப்படும் திருவள்ளுவரின் திருவுருவப்படங்கள் எத்தகைய வேறுபாடு மின்றி ஒன்றுபோலமைந்து காணப்படுவனவுங் குறிக்கொண்டு நோக்கத்தக்கன.

ஔவையாரென்னுந் தமிழ் மூதாட்டியார் சிவநெறிக்குரிய ராய் நின்றே 'ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, முதலிய பொதுமுறை நீதிநூல்களை ஆக்கித் தந்துள்ளனர். அவர் ஒருநெறிக்கு உரியவர்என்பதுபற்றி அந்நூல்களை ஏனையோர் புறக்கணித்துவிட்டனரா? திருத்தக்கதேவரும், கவிச் சக்கரவர்த்தி கம்பரும், ஒவ்வொரு நெறிக்குரியவராக விருந்துகொண்டே பெருநூல் யாத்துள்ளனர். அதனை ஏனை நெறியாளர் படியாது விட்டுவிட்டனரா? அவற்றின்கண் காணப்படும் அறமுறைப் பொதுமைகளைக் கைக்கொண்டொழுகாது கடிந்தனரா? நாடிப் பார்மின்.

இராமகிருட்டிண பரம அம்சரும் அவர்தம் மாணவர் விவேகா னந்தர் முதலியோரும் ஒருநெறிக்குரியவராக இருந்துகொண்டே பொதுவுண்மைகளைப் பரப்பவில்லையா? அவர்கள் ஒருநெறிக் குரியவர்கள் என்பதுபற்றி உலகம் ஏற்றுக்கொள்ளாது தள்ளி விட்டதா? ஏசுநாதரும் நபிகள் நாயகமும் ஒவ்வொரு நெறிக் குரியராகவிருந்தே பொது அறம் போதிக்கவில்லையா? வையங் கைக்கொள்ளவில்லையா? பொது அறங் கூறுவோர் ஒருநெறிக்கும் உரியராயிருத்தல் கூடாதென்று விதியா? உலகங் காக்குந் தலைவர்கள் ஒருநெறிக்குரியராக விருந்தே ஏனை நெறியாளர் களையும் ஒன்றுபோல் காப்பதன்றே செங்கோன்மை! அங்ஙன மின்றிக் காக்கும் மன்னர்கள் ஒருநெறிக்கு உரியராயிருத்தலும், நெறிக்குரிய அடையாளங்களை மேற்கொள்ளுதலுங்கூடாவென வரையறுப்பதும் மதியுடைமையாகுமா? ஒருநாட்டில் வாழ்வார் ஒரு மொழியாளராய், ஒரு நெறியாளராய் இருத்தல் வேண்டும்; இல்லாவிட்டால் வலுக்கட்டாயமாக ஆக்கிவிடுதல் வேண்டும்

என்று எவரேனுந் துணிந்தால் உலகம் ஏற்றுக்கொள்ளுமா? இது போற்றுனுகும் திருவள்ளுவ நாயனுரும் ஒரு நெறிக்குரியராயிருத்தல் கூடாதெனக் கூறுவார் கூற்றும் என்க.

மேலும் கழக வாயிலாக இதுகாறும் 'திருக்குறள்' நாட்குறிப்பாகவும், திருக்குறள் மூலம் கண்கவர் வனப்புடன் பல அளவுள்ள வடிவமாகவும், பரிமேலழகர் உரையாகவும், தெளிவுரையாகவும், பொழிப்புரையாகவும் பல பதிப்பாக ஏறத்தாழ ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட படிகள் வெளிவந்துள்ளன. இன்னும் வந்துகொண்டிருக்கின்றன. இவற்றின்கணெல்லாம் திருவள்ளுவரின் திருவுருவப்படம் எவ்வகை மாறுதலுமின்றி ஒன்றுபோல் வந்துகொண்டிருக்கிறது உலகமும் உவந்து ஏற்றுக்கொண்டு வருகிறது. இவையன்றியும் தனியாகத் திருவள்ளுவ நாயனுரின் திருவுருவப் படங்கள் சிறிதும் பெரிதுமாகிய அளவில் ஒரு லட்சத்துக்குமேல் வெளிவந்துள்ளன. இவற்றையெல்லாங் கண்டுகளித்த தமிழகத்தார்க்கும் வெளியுலகத்தார்க்கும் அஞ்சற்றலைக் கற்பனைப் புதுவுருவம் எங்ஙனமிருக்கு மென்பதனைச் சற்று எண்ணிப்பார்மின்.

1935 இல் பேறிஞர் பலரமைந்த ஒரு குழுவினரால திருவள்ளுவர் திருநாட்கழகம் அமைத்துத் 'திருக்குறள் மாநாடு' சென்னைக்கோநகர்க்கண் மறைமலையடிகளார் தலைமையில் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. அக்குழுவில் கழக ஆட்சிப்பொறுப்பாளர் பொருளாளராக விருந்து பணியாற்றினர். அதையொட்டித் திருவள்ளுவர் நினைவு மலரொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதன்கண் அமைந்த திருவுருவமும் முன்னுள்ளதேயாம். அதன்பின் கழகத்தாரால் தூண்டப்பட்டுந் தாமே விரும்பியும் சென்னை மாநிலச் சிற்றூர் பேரூர்களில் தொடங்கப்பட்டு நல்ல முறையாக நிகழ்ந்துவரும் 'திருவள்ளுவர் கழகங்கள்' பலவாகும். அங்கெல்லாம் தொங்கவிடப்பட்டு நாளும் வழிபாடு செய்து வரப்படும் திருவள்ளுவர் திருவுருவப்படங்களும் பண்டுள்ளனவேயாம்.

நம் சென்னை மாநில ஆட்சியாளர் எட்டாண்டுகளுக்குமுன் கழகத்தாரிடம் திருவள்ளுவர், ஔவையார், கம்பர் முதலிய பெரும் புலவர் படங்களை அனுப்பித் தருமாறு குறித்திருந்தனர். அதன்மேல் அழகிய திருவள்ளுவர் திருவுருவப்படம் ஒன்று கழகத்தாரால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதுதான் அஞ்சற்றலையில் பொறித்துவரும் என்று எதிர்பார்க்கப்பெற்றது. அஃதென்னயிற்றோ?

இரண்டாவது திருக்குறள் மாநாடு சென்னை மாநகர்க்கண் டாக்டர் சாமிநாத ஐயர் அவர்கள் தலைமைக்கண் நடந்தது. அப்

பொழுதுந் திருவள்ளுவர் திருவுருவம் முன்போலவே மாறுத லின்றியிருந்தது அறிஞர்கள் பலரும் அகமுவந்து கொண்டனர். இவைகளை யெல்லாம் புறக்கணித்துவிட்டுப் புதிய கற்பனைத் திருவுருவம் திருவள்ளுவர்க்கு ஏற்படுவதற்கு நேர்ந்த காரணந் தான் புரியவில்லை.

சமயவுணர்வும் தமிழ்ப்பற்றும் மிக்கிருந்த ‘மறைமலையடி களார், ஞானியாரடிகளார், கா. சு. பிள்ளையவர்கள், பண்டித மணியவர்கள், நாட்டாரவர்கள்’ முதலிய பெருந்தலைவர்கள் இன்றிருந்தால் இவ்வுருமாற்றத்தை ஒருகாலும் ஏற்றுக்கொள் ளார்களென்பதுறுதி. இதனை அறிஞர்கள் ஆராய்ந்து சிந்தித்து மெய்ம்மை காணுமாறு வேண்டுகின்றோம்.

முன்பின் ஆராயாமல் தமிழ் அறிஞர்களில் ஒரு சிலரும், அரசியல் அறிஞர்களில் ஒரு சிலரும், பெருமக்கள் மேற்கொண்டு வரும் பழைமையை நோக்காது அஞ்சற்றலையில் பொறிக்கப் பட்ட திருவள்ளுவர் திருவுருவத்துக்கு ஒப்புதல் கொடுத்து [...]ட்டது சரியா என்பதை அறிவுடை உலகம் சிந்தித்துப் [...]ார்க்கட்டும். மேலும் முன்னுள்ளமைக்கு மாறாக இன்று சர்மா [...]ட்டிய உருவம் சரியானதல்லவென்று நாளை வேறொருவர் வந்து வேறோர் உருவம் தீட்டின் ஏன் ஒப்புக்கொள்ளுதல் கூடாது? அதனை மறுப்பார் யார்? நூலுக்குத்தான் பெருமை, உருவத்தைப்பற்றிக் கருதவேண்டுவதில்லை என்பாருளராயின் அவர்கள் உருவமில்லாமல் நூலைமட்டும் பூசித்துவரலாமே. அங்ஙனமின்றி மரபினை மாற்றுவது தமிழர் பண்பாடாகாது என்பதையும் நன்கு நாடுதல் வேண்டும்.

திருவள்ளுவர் உருவத்தை அஞ்சற் றலையில் பொறித்து வெளியிடுமுன் மத்திய அரசினர் தமிழ் நாட்டு அறிஞர்களை வெளிப்படையாகக் கலந்து முடிவு செய்திருக்கவேண்டும். அவ் வாறு செய்து உருவம் பொறித்ததாகத் தெரியவில்லை. சமயக்குறி அவ்வுருவத்தில் இல்லாமை கருதிச் சிலர் ஒப்புதல் தந்தனர் என்றும், அஞ்சற்றலையில் உருவம் வந்ததே போதும் என்று கருதிச் சிலர் ஒப்புதல் தந்தனர் என்றும் கேள்விப்படுகிறோம். தமிழ்நாட்டறிஞர் பலரும் இதனை ஒப்புக்கொள்ளார் என்பது ஒருதலை.

இஞ்ஞான்று அஞ்சற்றலையில் வந்த திருவள்ளுவர் உருவமே நாடெங்கும் பரவுதல் வேண்டும் என்ற முயற்சி இனி நடைபெறும். சென்னை அரசினரோ, மத்திய அரசினரோ இவ்வுருவத்தையே ஏற்றுப் போற்றவேண்டும் என ஆணையிடுதல் அறநெறியாகாது. தமிழ் மக்கள் இனியேனும் விழிப்புடனிருக்க முயல்க.

ஓம்

*முன் இதழில் வெளிவந்த அடிகளாரின்

பொங்கல் வாழ்த்துக்குரிய விளக்கம்

அருள் சேர்ந்த நெஞ்சினராம், அறிவுடைப் பெருமகன், ஆவியுலகுறைபவரை ஆட்டிப்படைக்கும் அன்பர், எம் சிந்தைக் கினியர், என்றுமே திருவருளே துணை செய்வானென அறிந் தொழுகும் அன்பர், உள்ளியதெல்லாம் உடன் எய்தும் உத்தமர், மெய்ப்பொருள் காணும் மெய்யுணர்வினர், திருநெல்லைத் தலத் தெழுந்த சீர்பெருகு தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகங் கண்ட திண்தோள் திருவரங்கத்தினிளைஞர், இற்றைய அமைச்சர், எம்மன்பிற்குரியர் திரு. சுப்பையா பிள்ளை அவர் கட்கு,

நும்தம் மனத்திலே மறையாமலையாக இடம்பெற்ற மறை மலை, குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தன் முன்பு வைத்து, பெருவிருப்புடன் பொருத்திய திட்டத்திற்கோர் ஆதரவளித்த கோமானும் குணக்குன்றை, கற்றாவின் மனம் போலக் கசிந் துருகி, எம் இன்விருப்பினை ஈடேற்றத் துணையளிக்கும் தன்மை யினை ஈயேயென இறைஞ்சிய எழிலார் இறையை வணங்கிப் பின் வணக்கம்.

நும் ஆங்கில நாள் 14-1-60, 16-1-60 அஞ்சல்கள் கிடைக்கப்பெற்று, எம் மிளைஞனால் படிக்கக் கேட்டு எக்களிப் பெய்தினம்.

எம் இன்வாழ்த்தைத் தைத்திருநாளின் தலைவாழ்த்தைத் தம் இன்புறு வெண்ணுடன் ஏற்றமை குறித்து எளியனும் மறை மலை, கருதற்கு ஒண்ணாக் காணாவுலகவாசி, கழிபேருவகை எய்தினமெனல் மிகையாகாது. நுமக்கு அடிகளாம் மறைமலை வரைந்த வாழ்த்திலேற்பட்ட ஐயம் எம் மிளைஞனுக்கும் ஏற்பட்டு

---

* ஒளியுலகத்துறையும் மிக்க அளிசேர் 'மறைமலையடிகளாரவர்கள்' அவ்வப்போது அரும்பெருங் கட்டுரைகளும், இன்றியமையாத காலங் களில் வாழ்த்து நன்மொழிகளும் வழங்கி வருகின்றனர். அது நம் முடைய தவப்பேறேயாகும். அம்மட்டுமன்று, எதும் ஐயம் ஏற்பட்டால் அவ்வையத்தையும் உடனே தக்கசான்றுடன் போக்குகின்றார்கள் என்பதற்கு இவ்விடையே போதிய சான்றாம். இஃது அடிகளாரின் அந்தண்மைக்கோர் எடுத்துக் காட்டாகும். இதன்கண் தினைத்தனை ஐயமுங் கொள்ள இடனின்று.

அடிகள் இவ்வாறு வரைதலில்லையேயென, முதற்கண் யாமாகிய மறைமலை வரைந்ததை அடித்தனன். அடிகளாம் மறைமலை "தோலினால் தோற்றுவித்ததோர் திருக்கூட்டத் திருநாளாம்" என்பதனை எம் சிற்றறிவுக் கெட்டியாங்கு விளக்குதல் நன்றெனத் திருவருளை நினைந்தே விளக்கத் துவங்குகின்றனம். திருவாசகங்கண்ட திருவாதவூரர், மணிவாசகப் பெருமானின் மணிமொழிகளே சான்றுகளென்பதனைத் தாமறிதல் திறனே.

(1) சிவபுராணம்

" அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை"

இதன் பொருளை யுற்றாய்வு காண்க. இதனைத் தோற்றுவித்தற் குரியவன், தோற்றுவித்ததாம் ஒரு திருக்கூட்டமெனக் குறித்துள்ளோம். பல கூட்டங்களைப் புறந்தோல் போர்த்துத் தோற்றுவித்திருப்பினும் இத் தைத் திருநாளாம் முதல் நாளில், அக் கூட்டம் எத்தகைத்தென்பதை விளக்கவே, "ஆறறிவு கொண்டு வந்த," எனச் சுட்டினம். அறிதல் நன்று.

(2) திருச்சதகம் (6) அனுபோகசுத்தி (54) "மலமாக் குரம்பை"

(3) செத்திலாப்பத்து (5) "காயமாயத்தை"

(4) உயிருண்ணிப்பத்து (10) "ஊன்பாவியவுடலை"

(5) திருவேசறவு (10) "ஊனுநம் உயிர்வாழ்க்கை"

(6) ஆனந்தமாலை (3) "தோலின்பாவை"

(7) "என்புதோல் போர்த்த உடம்பு" (வள்ளுவர்)

இரண்டாவது அடியை மட்டிலுமாய்க.

கருத்தாய்ந்தால், அடிகளாம் மறைமலை, தோலினால் தோற்றுவித்ததோர் திருக்கூட்டத் திருநாளாம், ஆறறிவு கொண்டு வந்த அரிதெனவே இப் பிறவியென வுரைக்கும் உறு இனமாம், மானிட இனத்தையே குறித்தனமென்பதைக் கருத்துட்கொளல் நன்று.

அடுத்தபடியாகக் "கோனானின் திருநாளாம்" என்ற சொற்றொடரின் கருத்தை விளக்குவாம்.

கோன் + ஆன் + இன் = கோனானின் (சரியோ, தவறோ) கோன் ஆனின். (இன்) ஐந்தாம் வேற்றுமையுருபோவென வெண்ணுகின்றோம். புதுமைப் பிரிப்பாகவே எமக்குத் தோன்றுகின்றது.

திருவாசகம்

(1) சிவபுராணம் வரி 9. கரங்குவிவார் உண்மகிழுங் "கோன்" கழல்கள் வெல்க—கைகூப்பி வணங்கும் அன்பர்கள் அகத்தே நினைந்து நினைந்து மகிழ்வதற்கு ஏதுவான "இறைவனுடைய" திருவடிகள் சிறப்பனவாக.

(2) திருச்சதகம் அறிவுறுத்தல் (15) "கோனாகி" யான் எனதென்று அவர்அவரைக் கூத்தாட்டு" "முதல்வனாகி" யெனப் பொருள் கொள்க.

(3) திரு அம்மானை (16)—அளவிறந்த பல்லுயிர்க்குங் "கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய்" "தலைவனாய்" எனப் பொருள் கொள்க.

(4) திரு அம்மானை (14) "தேனையும் பாலையுங் கன்னலையும் ஒத்தினிய கோனவன்போல் வந்தென்னைத் தன்தொழும்பிற் கொண்டருளும் வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய்!" தேனும், பாலும், சர்க்கரையும் போலத் தித்திப்பானாயுள்ள எங்கள் "தலைவனை, தலைவனைப்போல் ஆசிரியனாய் எழுந்தருளி," எனப் பொருள் கொள்க.

இக் கருத்துக்களை ஆய்ந்தால் கோனானின் என்பதற்கு எளிதிலே பொருள்தெரியும்.

கோனானின் திருநாளென்றால் பொருளென்னை? தைத் திருநாளாம் பொங்கற் பெருநாளில், பெண்ணினத்தார் பொங்கற் பணியாற்றத் தொடங்குமுன்னர், மண்ணால் ஓர் உருப்பிசைந்து அதனைத் திருவிளக்கின் அடுத்திருத்தி "உடையவ"ரென உரைப்பதைத் தாமறியலாமே. அதுவே சிவம். சிவத்தின் திருநாள் கோனானின் திருநாள். உலகிற்கெல்லாம் சிறந்த தலைவனின் ஒப்பற்ற திருநாள் என அறிக.

செல்வரே! நும் 14-1-60 அஞ்சற்கு நாளை மறுநாள் பதிலிறுப்பதாயிருக்குமெனத் தாமறிதல் நன்று.

ஆடகச்சீர் மணிக்குன்றும் அம்மை அம்பலவாணன் அருளளிப்பான் வணக்கம்.

ஆங்கில நாள் 18-1-60　　அன்பன்,
மறைமலை (நெல்லை).

*தைப்பொங்கற் பெருவாழ்த்து

நீலவுருவிற் குயிலன்ன நீலா !

தென்பாண்டி நாட்டாராம், திருநெல்லைப் பதியவராம், சென்னையம்பதி யுறைபவராம், திருவரங்கத்திளையவராம், திருக் குமரன் திருவடியை நாளுநாளும் துதிப்பவராம், தில்லி சென்று வெற்றியுடன் வந்தவராம், திண்மைகொண்ட மனத்தினராம், திருக்குமரன் திருப்பெயர் கொண்டவராம், தீர்க்கவுருப் பெற்ற வராம், தங்கை மங்கைதனை மனமகிழ்ந்து மணமது புரிந்தவராம், மக்கட்பேறுடையவராம், கார்வண்ணங் கொண்டவராம், அண்ணியாரென் றழைப்பவராம், அண்ணன்தன் குழவிகட்கு ஆதரவு அளிப்பவராம், விகாரி தைமுதல்நாளாம், தைப்பொங்கற் றிருநாளாம், தமிழன்தன் திருநாளாம், தமிழரசி பெருநாளாம், தேயத்தின் தென்னகத்துத் திருநாளாம், ஞாயிற்றின் வரவு கண்டு நலமுடனே பால் பொங்கல் பெருநாளாம், அன்னவர் தம் அண்ணியவள் திருவரங்க நீலாம்பிகை யம்மையராம், அத் திரு நாளில் அவரில்லில் தங்கை நல்லாள் மங்கையர்க்கரசியுடன் இயைந்திருந்து முகனமர்ந்து, பால்பொங்க, பொங்கலது தான் பொங்கப் பணியாற்றப் பண்புடனே அழைத்து வந்தேனென உரைத்துக் காத்திருந்தார் உன் தலைவாயில். "அழைக்க வந்தேன் அண்ணியரை, அவரிடத்தில் அன்புடனே உரைக்க வந்தேன், உத்தமியாள் இங்கில்லை, உரைப்பீரோ" வென வினவ, "உரைக்கின்றேன் உத்தமரே! தாம் சென்று வருக" வென் றேன்.

கிஞ்சுகவாய் அஞ்சுகமே !

எவரென்றறியாயோ? ஆலமர் செல்வன்; விண்பொரு நெடு வரைக் குறிஞ்சிக் கிழவன்; பலர் புகழ் நன்மொழிப் புலவரேறு; அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் செல்வன்; வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வன்; இழையணி சிறப்பிற் பழை யோள் குழவி; மங்கையர் கணவன்; பெரும்பெயர் முருகன், உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீரலைவாய், அவனுறை சென்றங்கு சுந்தரத்தம்மையர் அன்னவன் திருவடித்தாமரை இறைஞ்சிய பயனும், அன்னவன் அருளொடு, என் கொழுநர்க் கிளையரா யீன்ற, நல்லிசைச் செவ்வேள் பெயருங் கொண்டு, வீரரென இலங்கும் வீரவாகு, அருளுடை மகனின் அருளால், எளியவள் என்னைக் குதிகொள வைக்கக் கூறவந்த உரையெனக் காண்டல் கருத்தே.

---

* காணுவுலகவாசி தி. நீலாம்பிகையம்மையாரால் இயக்கி இயக்குநர் வழி எழுதப்பெற்று வந்தது.

ஒள் நித்தில நகையீர் !

நன்று ! நன்று ! வண்ணக்கிளிமொழித் தோழியரெல்லாம், தோழமை கொண்டு திருநாளாம் இத் தைத் திருநாளில், விகாரி தை முதல்நாளில், சென்னையம்பதியுறை செல்வரைக் கண்டு, தங்கை மங்கை நல்லாளுடனே, இயைந்திருந்து ஆற்றும் பணிகளை யாற்றி, போற்றுகபோற்றி! பொங்குக பால்! பொங்குக பொங்கல்! பொங்குக புதுவினை! மறைமலையுரைத்த பேறுடனி யைந்தென, முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளைப் பணிவுடன் போற்றி வாழ்த்துவம்.

பொங்குக பால்! பொங்குக பொங்கல்! பொங்குக களிப்பு !
பொங்குக மக்கட்பேறு ! பொங்குக புன்னகை !
பொங்குக] என்றும்நன்றென !

14—1—60 } திருவரங்க—நீலாம்பிகை
நெல்லை } காணவுலகவாசி

---

*தைப் பொங்கல் வாழ்த்து விளக்கம்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகக் கருத்தணிக் குரவரும், செந்தமிழ்ச் செல்வித் திங்கள் வெளியீடு நிகழ்த்திய திருவரங்கனார் திருமகள் திரு வரங்க நீலா தெருளுடன் திகழ்த்தும் திருத்தம்.

செந்தமிழ்ச் செறிவே !

சீர் பெருகும் சென்னைக் கிளைத் துறையில் செவ்வழிப் பண்ணுடன் செயலாற்றுந் தங்கட்கு திருவரங்க - நீலா தைப் பொங்கல் வாழ்த்து அனுப்பியமை குறித்து அன்புடையராகிய தாங்கள் விளக்கவுரை வினவுதலென்பது வியப்பெனவே வியப் பேனே அல்லை விருப்பெனவே விரும்புதலே என்ற வியனுக்கு வர இயலா நிலையிலே விளக்கமுரைத்தல் விருப்பெனவே விழைந்து வரையும், (இரா. ந. கு. வழி) விளக்கம்.

நீலவுருவிற் குயிலன்ன நீலாம்பிகை யென்னும் பெண் திரு வருளைத் தொழத் திருக்கோயில் சென்றிருந்த பொழுதினில், செந்தமிழ்ச் செல்வி ஆசிரியரும், திரு. சை. சி. க. முன்னாள்

---

* திருவாட்டி தி. நீலாம்பிகை அம்மையார் நெல்லை இயக்குநர்வழி எழுதி அனுப்பிய பொங்கல் வாழ்த்தில் சில தொடர்களைக் குறித்து விளக்கங் கேட்டதற்கு வந்த விடை.

*தைப்பொங்கற் பெருவாழ்த்து

நீலவுருவிற் குயிலன்ன நீலா!

தென்பாண்டி நாட்டாராம், திருநெல்லைப் பதியவராம், சென்னையம்பதி யுறைபவராம், திருவரங்கத்திளையவராம், திருக்குமரன் திருவடியை நாளுநாளும் துதிப்பவராம், தில்லி சென்று வெற்றியுடன் வந்தவராம், திண்மைகொண்ட மனத்தினராம், திருக்குமரன் திருப்பெயர் கொண்டவராம், தீர்க்கவுருப் பெற்றவராம், தங்கை மங்கைதனை மனமகிழ்ந்து மணமது புரிந்தவராம், மக்கட்பேறுடையவராம், கார்வண்ணங் கொண்டவராம், அண்ணியாரென் றழைப்பவராம், அண்ணன்தன் குழவிகட்கு ஆதரவு அளிப்பவராம், விகாரி தை முதல்நாளாம், தைப்பொங்கற் றிருநாளாம், தமிழன்தன் திருநாளாம், தமிழரசி பெருநாளாம், தேயத்தின் தென்னகத்துத் திருநாளாம், ஞாயிற்றின் வரவு கண்டு நலமுடனே பால் பொங்கல் பெருநாளாம், அன்னவர் தம் அண்ணியவள் திருவரங்க நீலாம்பிகை யம்மையராம், அத் திருநாளில் அவரில்லில் தங்கை நல்லாள் மங்கையர்க்கரசியுடன் இயைந்திருந்து முகனமர்ந்து, பால்பொங்க, பொங்கலது தான் பொங்கப் பணியாற்றப் பண்புடனே அழைத்து வந்தேனென உரைத்துக் காத்திருந்தார் உன் தலைவாயில். "அழைக்க வந்தேன் அண்ணியரை, அவரிடத்தில் அன்புடனே உரைக்க வந்தேன், உத்தமியாள் இங்கில்லை, உரைப்பீரோ" வென வினவ, "உரைக்கின்றேன் உத்தமரே! தாம் சென்று வருக" வென்றேன்.

கிஞ்சுகவாய் அஞ்சுகமே!

எவரென்றறியாயோ? ஆலமர் செல்வன்; விண்பொரு நெடு வரைக் குறிஞ்சிக் கிழவன்; பலர் புகழ் நன்மொழிப் புலவரேறு; அலங்தோர்க் களிக்கும் பொலம்பூட் செல்வன்; வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வன்; இழையணி சிறப்பிற் பழையோள் குழவி; மங்கையர் கணவன்; பெரும்பெயர் முருகன், உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீரலைவாய், அவனுறை சென்றங்கு சுந்தரத்தம்மையர் அன்னவன் திருவடித்தாமரை இறைஞ்சிய பயனாய், அன்னவன் அருளொடு, என் கொழுநர்க் கிளையரா யீன்ற, நல்லிசைச் செவ்வேள் பெயருங் கொண்டு, வீரரென இலங்கும் வீரவாகு, அருளுடை மகனின் அருளால், எளியவள் என்னைக் குதிகொள வைக்கக் கூறவந்த உரையெனக் காண்டல் கருத்தே.

---

* காணாவுலகவாசி தி. நீலாம்பிகையம்மையாரால் இயக்கி இயக்குநர் வழி எழுதப்பெற்று வந்தது.

ஒள் நித்தில நகையீர் !

நன்று ! நன்று ! வண்ணக்கிளிமொழித் தோழிய ரெல்லாம், தோழமை கொண்டு திருநாளாம் இத் தைத் திருநாளில், விகாரி தை முதல்நாளில், சென்னையம்பதியுறை செல்வரைக் கண்டு, தங்கை மங்கை நல்லாளுடனே, இயைந்திருந்து ஆற்றும் பணிகளை யாற்றி, போற்றுக போற்றி! பொங்குக பால்! பொங்குக பொங்கல் ! பொங்குக புதுவினை ! மறைமலையுரைத்த பேறுடனி யைந்தென, முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளைப் பணிவுடன் போற்றி வாழ்த்துவம்.

பொங்குக பால்! பொங்குக பொங்கல்! பொங்குக களிப்பு !
பொங்குக மக்கட்பேறு ! பொங்குக புன்னகை !
பொங்குக என்றும்நன்றென !

14—1—60 நெல்லை

திருவரங்க—நீலாம்பிகை
காணுவுலகவாசி

---

*தைப் பொங்கல் வாழ்த்து விளக்கம்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகக் கருத்தணிக் குரவரும், செந்தமிழ்ச் செல்வித் திங்கள் வெளியீடு நிகழ்த்திய திருவரங்கனார் திருமகள் திரு வரங்க நீலா தெருளுடன் திகழ்த்தும் திருத்தம்.

செந்தமிழ்ச் செறிவே !

சீர் பெருகும் சென்னைக் கிளைத் துறையில் செவ்வழிப் பண்ணுடன் செயலாற்றுந் தங்கட்கு திருவரங்க - நீலா தைப் பொங்கல் வாழ்த்து அனுப்பியமை குறித்து அன்புடையராகிய தாங்கள் விளக்கவுரை வினவுதலென்பது வியப்பெனவே வியப் பேனே அல்லை விருப்பெனவே விரும்புதலே என்ற வியனுக்கு வர இயலா நிலையிலே விளக்கமுரைத்தல் விருப்பெனவே விழைந்து வரையும், (இரா. ந. கு. வழி) விளக்கம்.

நீலவுருவிற் குயிலன்ன நீலாம்பிகை யென்னும் பெண் திரு வருளைத் தொழத் திருக்கோயில் சென்றிருந்த பொழுதினில், செந்தமிழ்ச் செல்வி ஆசிரியரும், திரு. சை. சி. க. முன்னாள்

---

* திருவாட்டி தி. நீலாம்பிகை அம்மையார் நெல்லை இயக்குநர்வழி எழுதி அனுப்பிய பொங்கல் வாழ்த்தில் சில தொடர்களைக் குறித்து விளக்கங் கேட்டதற்கு வந்த விடை.

அமைச்சரும், திருவரங்கனாரின் பின்னோருமாய, திரு. சுப்பையா பிள்ளை அவர்களாகிய, தாங்கள், என்னைத் தங்கள் இல்லத்திற்குப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைத்த கூற்றும், தாங்கள் தங்களை இன்னாரென (என் தோழியாகிய "அஞ்சுகம்" என்ற அயல்மனைக் கிழத்தியாளாகிய, என்னை எதிர் நோக்கி என் வீட்டுத் தலைவாயில் காத்திருந்தவளும், என் அன்பிற்குரியவளுமாகிய தோழியிடம்) அறிமுகப்படுத்திய கூற்றையும், என் தோழி தங்களிடம் உரைத்த உறுதி மொழியையுமே, "உரைக்கின்றேன் உத்தமரே" என்பதும், தங்கள் இருவரின் கூற்றுக்களையும் வீடு திரும்பி வந்தவளாகிய, திரு-நீலாவாகிய என்னிடம் உரைத்தாள் என்பதே கூற்று.

அவ்வாறு தங்கள் திருமுகப்படி (வினா) "பண்புடனே அழைத்து வந்தேன்" என உரைத்துக் காத்திருந்தேன் உன் தலைவாயில் என்பது யார் கூற்று? (காத்திருந்தானுன் தலை வாயில் என்பதைத் தட்டச்சுப் பொறியர், காத்திருந்தேன் உன் தலைவாயில் எனத் தட்டியிருப்பது தவறு) (தங்கள் திருமுகத்தில்) விடை:- (நானாகிய சுப்பையாபிள்ளை) அவளாகிய அஞ்சுகத்தினிடம் உரைத்தமையை, (வெளியில் சென்று வீடு திரும்பியவளாகிய நீலாவிடம்) "அடி! நீலா! உன் கணவர் திருவரங்கனாரின் இளையவராகிய திரு. சுப்பையாபிள்ளை, நெடுநேரம் உன் வருகை நோக்கித் தலைவாயிலில் காத்திருந்தார்" என்பதே தெளிவு.

" அழைக்க வந்தேன், உரைப்பீரோ" என வினவியது யார்?

அண்ணியார் வீட்டுத் தலைவாயிலில் அமர்ந்திருக்கும் அன்னாய்!

நானாகிய சுப்பையாபிள்ளை என் அருமை அண்ணியாரைப் பொங்கல் விழாவிற்கு நேர் முகத்தான் அழைக்க வந்தேன். அவர்களோ வீட்டில் இல்லை. எனக்குப் பல அலுவல்களிருக்கின்றன. ஆகையால், தாங்கள் (அஞ்சுகம் என்ற பெண்ணாகிய, அவளிடம்) அண்ணியாரிடம் நானாகிய சுப்பையாபிள்ளை வந்து காத்திருந்தேனென்பதையும், நான் சொன்ன அடையாளங்களையும் அண்ணியாரிடம் சொன்னால் அவர்கள் அறிய இயலுமெனவும், எனக்காகத் தாங்கள் உரைத்தால் நல்லது. அவ்வாறு உரைப்பீர்களா?

"உரைக்கின்றேன் உத்தமரே! தாம் சென்று வருக"

(திரு. சுப்பையா பிள்ளையாகிய தங்களை நோக்கி) அஞ்சுகம் என்ற பெண் உரைத்த கூற்று.

"எளியவள் என்னைக் குதிகொள வைக்கக் கூறவந்த உரையெனக் காண்டல் கருத்தே" என்பது யார் கூற்று?

தாங்களாகிய திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் வந்தழைக்குங்காலே வீட்டிலில்லாது வெளியே சென்றிருந்து, தாங்கள் என் வீட்டுத் தலைவாயில் திண்ணையில் காத்திருந்த என் தோழியாகிய அஞ்சுகம் என்பவள், தாங்கள் உரைத்தவைகளை என்னிடம் கூறியபோது, நானாகிய திருவரங்க-நீலா, என் தோழியாகிய அஞ்சுகத்திடம், தங்களை (திரு. சுப்பையா பிள்ளையை) இன்னாரெனத் தெளிவுடன் அவளிடம் (என் தோழி அஞ்சுகத்திடம்) கூறியும், அண்ணியாகிய என்னை மகிழ்விக்க, அவருடைய இல்லத்தில் என் தங்கையாகிய மங்கையர்க்கரசியுடன் இயைந்து பொங்கல் பண்ணல் வேண்டுமென்று விரும்பி, என்னை மகிழ்விக்க வந்த செயலடி, தெரிந்துகொள் என்று நானாகிய திரு-நீலா உள்ளம் நிறைவுடன் தோழியாகிய அஞ்சுகத்திடம் கூறிய கூற்றெனவே கொள்ளுதல் நன்று.

இத்துடன் இரண்டு பத்திகளுக்கும் விளக்கம் முடிந்தது விருப்புடையவர் விருப்புடன் காண்டல் விருப்பே.

(ஒள்நித்தில நகையீர்! என்று விளித்தல்) என் அன்புடைய இணைபிரியாத தோழியாகிய அஞ்சுகம் என்னுடன் இதைப் பற்றிச் சொல்லுங்காலே, அண்டையிலுள்ள அருமைத் தோழியர்கள் வந்து சூழ்ந்தனர். அவர்களை, என்னுடைய இணைபிரியாத தோழி அஞ்சுகம், எல்லோரும் இயைந்து சென்னை சென்று நீலாவின் தங்கையாகிய மங்கையர்க்கரசியுடனியைந்து பொங்கல் பணிகளை மகிழ்வுடன் ஆற்றி, போற்றக்கூடியவர்களைப் போற்றிப் பால் பொங்கட்டும், பொங்கல் பொங்கட்டும், மறைமலையடிகளுரைத்த புதுவினையாகிய ஆண்மக்கட்பேறு செல்வராகிய திரு. சுப்பையாபிள்ளை அவர்களுக்குக் கிட்டட்டுமென முன்னைப் பழம்பொருளாகிய சிவனைப் பணிவுடன் வணங்கி, வாழ்த்துவோம் என்று அழைத்தல்.

(சேர்ந்து பொங்கலன்றி வாழ்த்தல்)

பொங்குக பால்! பொங்குக பொங்கல்! பொங்குக களிப்பு!

பொங்குக மக்கட்பேறு! பொங்குக புன்னகை! பொங்குக

என்றும் நன்றென! என்று வாழ்த்துகின்றோம் சிலரே.

தெளிவு தந்துவிட்டேன், வணக்கம்.

திருமுறைகாட்டுந் தெய்வ உண்மை
சிவத்திரு, சேலம் கி. சுப்பராய பிள்ளை அவர்கட்கு
நிகழ்த்திய பாராட்டு விழா

நம் அருந்தவப் பேற்றால் நாம் காணுமாறு திகழ்கின்ற மெய்ம்மைச் சிவனடியார் குறித்த பெரியாராவர். அவர்களுக்கு இப்பொழுது வயது 91. அவர்களுடைய 84ஆவது வயதில் வலது முழங்கால் எலும்பும் விலா எலும்பும் முறியப்பெற்றன. பேர்போன சென்னை மருத்துவர் பலரும் தக்க மருந்து முறைகள் செய்து குணப்படாதெனக் கைவிட்டு விட்டனர். அவர்கள் சிவத் திருவூர்கள் 274இல் 260 திருவூர்களுக்குப் பல முறை சென்று வழிபட்டுத் திருவருள் நிரம்பப் பெற்றவர். திருவருள் நம்பிக்கை உறுதியால் திருமுறையில் கயிறு சார்த்திப் பார்த்தனர் "விங்கு விளை" எனத் தொடங்கும் திருமாகறல் திருப்பதிகம் வந்தது. அதன்மேல் அவர்கள் திருமாகறலென்னுந் திருவூர் சென்று ஆங்குள்ள மெய்யன்பர் பலர் புரிந்த பேருதவியினால் ஒவ்வொரு நாளும் திருக்கோவில் சென்று திருத்தநீர் முழுகி அத் திருப் பதிகத்தினைப் பெருங்குரலெடுத்தோதி வந்தனர். ஓராண்டுக்குள் படிப்படியா நலமெய்தி முற்றுங் குணமாகிப் பண்டுபோல் நடப் பாராயினர். இவர்கள் வரலாற்றைச் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு ௩௧, பரல் ௧0, பக்கம் ௪௯௩ இல் விரிவாகக் காணலாம்.

இவர்களைச் செந்நெறிச் செல்வர்களுக்கு அறிமுகப்படுத்து வதால் சிவநெறி மாண்பு விளங்கும் என்னுங் குறிப்பினுடன் 29-2-1960 திங்கள் மாலை 6-30 மணிக்குச் சென்ன மல்லீசுரர் சென்னகேசவப்பெருமாள் தேவத்தானத்தின் சென்னமல்லீசுரர் கோயில் அனுபூதி மண்டபத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. அப்பொழுது அறநிலையப் பாதுகாவல் ஆட்சித்துறை ஆணையர் உயர்திரு, அ. உத்தண்டராம பிள்ளை, I. A. S. அவர்கள் தலைமை பூண்டார்கள். உயர்திரு, மணலி இராமகிருட்டிண முதலியார் அவர்கள் (பரம்பரைத் தருமகருத்தர்) எல்லார்க்கும் மாலை யணிவித்துச் சிறப்பித்தனர். கடவுள் வாழ்த்துக்குப்பின் கழக ஆட்சியாளர் வரவேற்புரை மொழிந்தனர். தலைவரவர்கள் முன்னுரையில் திருமுறையைப்பற்றிய மெய்ப்பெருமைகளையும் இப் பெரியாரவர்களின் உறுதிப்பாட்டின் திறனையும் நன்கெடுத்து மொழிந்தனர். சைவப்பாதிரியார் திரு. ச சச்சிதானந்தம் பிள்ளை பி ஏ. எல். டி. அவர்களும், திரு. ச. சிவகுமரன், எம்.ஏ., அவர் களும், சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாத பிள்ளையவர்களும் பாராட்டிப் பேசினர்.

சிவத்திரு, சேலம்
கி. சுப்பராய பிள்ளையவர்கட்குப் பாராட்டு விழா

சிவத்திரு, கி. சுப்பராய பிள்ளை, கழகப்புலவர், திரு. ப. இராமநாத பிள்ளை, கழக ஆட்சியாளர், திரு. வ. சுப்பையா பிள்ளை

பாராட்டு விழாவிற்குத் திரு. அ. உத்தண்டராம பிள்ளையவர்கள் தலைமை தாங்குதல்

பாராட்டு விழாவிற் கலந்துகொண்ட பெருமக்கள்

பாராட்டப் பெற்ற பெரியார் தங்களுடைய திருமுறைத் தோய்வு முழுமையினையும் மெய்ப்பாடுதோன்ற எடுத்து மொழிந்தனர். இடையிடையே பெருங்குரலெடுத்துத் திருமுறைப் பாக்கள் சிலவும் ஓதினர். கடவுள் வாழ்த்துடன் திரு. வ. சு. அவர்கள் நன்றி நவில இரவு பத்து மணிக்குக் கூட்டம் இனிது நிறைவுற்றது.

"தெய்வத் திருவருளால் செந்தமிழின் மாமறையாய்
உய்வைத் தருவனவாய் ஒண்மையொடும்—வையத்து
நின்ற பயனருளும் நீர்மைத் திருமுறைகள்
என்றுமே வாழ்க இனிது."

"இனிதாகும் அம்மறையின் ஏற்றமெலாம் இந்நாள்
இனிதாக யாமுணர எம்முன்—இனிதாக
வீற்றிருக்கும் சுப்பரா யர்வாழ்க ஊழிபல
ஆற்றுதிருத் தொண்டால் அமர்ந்து."

குறிப்பு: அச்சிவனடியாரின் திருவுருவப்படமும், திருமாகறல் திருப்பதிகத் திருப்பாட்டுக்கள் பதினொன்றும் உயர்ந்த வெண் கடிதத்தச் சிட்டு வீடுகளில் தொங்கவிட்டுப் பயனெய்துவதற்கு வாய்ப்பாக மலிந்த விலையாகிய 5 காசுக்குக் கழகத்தாரால் வழங்கப்பட்டது.

இயற்கை எய்திய சக்கரவர்த்தி நயினர்

M.A., L.T., I. E. S.

தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளர் பேராசிரியர் திரு. அ. சக்கரவர்த்தி நயினரவர்கள் 12-2-1960 இரவு தங்கள் இல்லத்தில் இயற்கை எய்தினமையறிந்து வருந்துகிறோம். அவர் தமக்குரிய சமண சமய இலக்கியம்பற்றிச் சிறந்த ஆராய்ச்சிகள் நடத்தியவர். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்துள்ளனர். பல சிறந்த நூல்களியற்றியுள்ளார். குடந்தை அரசினர் கல்லூரி முதல்வராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். அவர்கள் சென்னை மாநிலக் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகவும், இராசமந்திரிக் கல்லூரியின் முதல்வராகவும் பணிபுரிந்துள்ளனர். அவர் தமக்கு அகவை எழுபத்தெட்டு. அவருக்கு ஒரே ஒரு மகளுண்டு. இப்பெரியாரின் பிரிவு தமிழுலகத்திற்கு ஈடு செய்யவொண்ணாப் பேரிழப்பாகும். கழகத்தாரின் நிறைந்த வருத்தத்தை அறிவித்துக் கொள்கின்றோம். அவர்தம் ஆவி இயற்கையின்பம் எய்துமாக! குடும்பத்தார்க்குக் கழகத்தாரின் ஆறுதலுரை உரியதாகும். விரிவான வரலாறு பின்னர் வெளியிடப்படும்.

மறைமலையடிகள் நூல்நிலையத்திற்கு

நிதி அமைச்சர் சுப்பிரமணியம் வருகை

சென்னை மாநில நிதி, கல்வி அமைச்சராய திரு. சி. சுப்பிரமணியப் அவர்கள் சென்ற 16—2—60 செவ்வாயன்று நூல் நிலையத்தைப் பார்வையிட்டார். கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களின் அழைப்புக் கிணங்கி வந்திருந்தார். செவ்வாய் மாலை 6 மணி அளவில் அமைச்சர் நூலகத்திற்கு வந்த பொழுது கழக ஆட்சியாளரும், கழக இயக்குநர்களில் இருவராய திரு. சொ. சுப்பிரமணிய பிள்ளையும், திரு. மு. நாராயணன் செட்டியாரும், எட்டாம் மாவட்ட நடுவரான திரு. ஆவுடை நாயகம் பிள்ளையும் இன்னும் கழக அலுவலரும் அவரை வரவேற்றனர்.

அமைச்சர் நூலகத்தின் ஒவ்வொரு பகுதியையும் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் பார்வையிட்டார். அவர் காட்சிக்கென அரிய பல பழைய நூல்கள் வைக்கப் பெற்றிருந்தன. கவர்ச்சி மிக்க பல்வகைக் கட்டடங்கள் செய்யப்பட்ட நூல்கள் வைக்கப்பெற்றிருந்தன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன வெள்ளி, தந்தம், பட்டு, வெல்வெட், கதர், ரெக்ஸைன் போன்றவற்றால் செய்யப்பட்ட கட்டடங்களாம். இந்நூறுக்கு மேற்பட்ட தமிழ்ப்புலவர்கள் உருவப் படங்களின் தொகுப்பேட்டைப் பார்த்து மகிழ்வுற்றனர்.

நூலகத்தை முழுவதும் கண்டுகளித்த அமைச்சர் பார்வையாளர் ஏட்டில் "இந் நூல் நிலையத்திற்கு இன்று வந்து இங்கு சேகரிக்கப்பட்டு வைத்திருக்கும் அரிய நூல்களைக் காணும் வாய்ப்புக் கிடைத்ததுபற்றி மகிழ்ச்சியடைகிறேன். இந்நிலையம் மேன்மேலும் வளர்ச்சியுற்றுத் தமிழின் பழங்கால பெருமையை எடுத்துக் காட்டுவதுடன் வருங்கால வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் வழிகாட்டுமென நம்புகிறேன்" என்று எழுதினார்.

அரைமணி நேரம் நூலகத்தைப் பார்வையிட்ட பின்னர் அமைச்சர் அங்குக் குழுமி யிருந்தோரிடம் விடைபெற்றுக் கொண்டார். கழக ஆட்சியாளரும், நூலகரும் அமைச்சருக்கு நன்றி நவின்றனர்.

மறைமலையடிகள் நூல்நிலையத்தில்
அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம்



நூல்நிலையத்திற்கு அமைச்சர் அவர்கள்
வருகைதந்த காலை கழக ஆட்சியாளர்களும் அலுவலர்களும் வரவேற்றல்

அமைச்சரவர்கட்குக் கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை,
அடிகளார் படித்துப் பாதுகாத்துவைத்த நூல்களைக் காட்டுதல்

கவுந்தியடிகள்

[திரு. ம. ஸ. விமலானந்தம் எம். ஏ.,]

கற்பனைப் படைப்பா?

கவுந்தியடிகள் கற்பனைப் படைப்பா? அன்றிக் காப்பியத்திற்கு இன்றியமையாப் பாத்திரந்தானா? இன்றியமையாப் பாத்திரமெனின் இளங்கோ படைத்ததேன்? கற்பின் செல்விக்கு உற்ற துணையாகவா? ஊடல் தீர்க்கும் உறுப்பாகவா? அல்லது சமண சமய விளம்பரராகவா? (Propagandist) என்பன போன்ற கவுந்தி பற்றிய கருத்துக்கள் பலவாகும். இக்கருத்துக்கள் எவ்வளவிற்கு உண்மை என்பதுவும், கவுந்தியடிகள் காப்பியத்தில் பெறும் இடமும், அவரால் காப்பியம் பெறும் சிறப்பும் காண்பதே இக்கட்டுரையின் கருத்தாம்.

காப்பியத்தில் கவுந்தியடிகள்

காப்பியத்தில் கவுந்தியடிகள் தோன்றுவது ஒரே ஒருமுறை தான்! காப்பியத்தில் நுழையுமிடம்: புகார்க்காண்ட நாடுகாண் காதையில்; காப்பியத்தினின்றும் நீங்குமிடம்: மதுரைக் காண்ட அடைக்கலக் காதையில்; இதற்கிடையில் இவர் பேசுமிடங்கள் பதினொன்று. விவரம் வருமாறு:

காப்பியத்தில் வருமிடம்: நாடுகாண் காதை: அடி: 45.

பேசுமிடங்கள்:	நாடுகாண் காதை:	45-49; 52-60; 64-97; 194-207; 224-226; 231-32; 241-244;
	காடுகாண் காதை:	152-161;
	ஊர்காண் காதை:	25-61;
	அடைக்கலக் காதை:	107-113; (120-124) 125-200;

காப்பியத்தினின்று விடைபெறுமிடம்: அடைக்கலக் காதை-அடி: 200.

மாதவத்தாட்டியின் மாண்பு

காப்பிய வாயில்

ஆருகத சமயத் தவமுதியள் இக்கவுந்தியடிகள். சோழ நாட்டில் பொதுவறு சிறப்பினதாய புகார் நகருக்கு மேற்கே ஒரு காவத எல்லையில் பள்ளியமைத்து அறம்புரியும் அறச் செல்வி. மதுரை செல்வழியில் வழிசெல் வருத்தம் களைவான் வேண்டி இத்தவமுதல்வியின் தவப்பள்ளி அமைந்துள்ள சோலையில் தங்கினர். அதுபோது அடிகளைக் கண்டு வணங்கவே, விவரமறிந்த புண்ணிய முதல்வியும் மதுரைக்குப் புறப்படுகின்றார். இதுவே கவுந்தி காப்பியத்தில் நுழையுமாறு.

உயர்ந்த உள்ளமும் உயரிய நோக்கும்

எடுத்த எடுப்பிலேயே தம்பால் வந்தணைந்த கயமலர்க் கண்ணியையும் காதற் கொழுநனையும் கண்ட கவுந்தி,

"உருவும் குலனும் உயர்பே ரொழுக்கமும்
பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்."
உடையீர்! (நாடுகாண் ௪௩-௪௮)

எனவும், முன்பின் அறியா மறையவனை, 'நலம்புரி கொள்கை நான்மறையாள!' எனவும் விளித்தமை இவர்பால் அமைந்த பெருமித நோக்கையும் பேரருள் நெஞ்சத்தையும் நன்கு விளக்குவன.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்."

என்ற தமிழ்மறைக்கு இத்தவமூதாட்டி தக்க சான்றாக அமைவது ஈண்டு அறியத்தக்கது.

இரக்கமும் ஏக்கமும்

இவர்பால் அமைந்த இரக்கவுணர்வு எவருள்ளத்தையும் தொடுவதாகும். 'என்னோ வுறுகணாளரிற் கடைகழிந்து இங்ஙனம் கருதியவாறு' எனக் கோவலனிடத்து இரங்கிக் கூறுவதும்;

"பாடகச் சீறடி பரற்பகை யுழவா
காடிடை யிட்ட நாடுநீர் கழிதற்கு
அரிதிவள் செவ்வி அறிகுநர் யாரோ?" (நாடுகாண் ௫௨-௫௪)

எனக் கண்ணகியின் மென்மைத் தன்மையைக் கூறி மதுரைக்குச் செல்லுதலை விலக்க, அவர்கள் கேளா தொழியவே தானும் அவர்களுடன் புறப்படும் பான்மையும் செலவின் போது கூடச் செந்தமிழ்ப் பாவைக்குத் துயர் தருவனவற்றை விலக்கிச் செல்லும் விதமும்;

"குறுநர் இட்ட குவளையம் போதொடு
பொறிவரி வண்டினம் பொருந்திய கிடக்கை
நெறிசெல் வருத்தத்து நீரஞர் எய்தி
அறியாது அடிஆங்கு இடுதலும் கூடும்." (நாடுகாண் ௮௭-௮௧)

எனவும்,

"எறிநீர் அடைகரை இயக்கந் தன்னிற்
பொறிமாண் அலவனும் நந்தும் போற்றாது
ஊழ்அடி ஒதுக்கத்து உறுநோய் காணின்
தாழ்தரு துன்பம் தாங்கவும் ஒண்ணா." (நாடுகாண் ௯௦-௯௩)

எனவும், ஏனை உயிர்களின் இன்னல் கண்டு துன்புறும் நிலையும் இவரது அன்பு நெஞ்சத்தையும் அருளுணர்வையும் அறிவிப்பன வாகும்.

தவமுதல்வியின் தவவலிமை

'கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி' எனச் சாரணரும், 'நோற்று ணல்நொசி தவத்தீர்', 'தவப்பெருஞ் சிறப்பிற் கவுந்தி ஐயை', 'மாதவத்தாட்டி', 'புண்ணிய முதல்வி' என இளங்கோவும் புகழ் வதே இவரது தவச்சிறப்பிற்குத் தக்க சான்றாகும்.

மாதரும், கணவனும் மாதவத்தாட்டியும் (மூவரும்) செல விடையே பல்வகை வளமும், சில்வகை ஒலியும் கண்டு கேட்டுத் துன்பம் தோன்றாது வழிநடந்து காவிரியின் தென்கரையை யடைந்து ஆங்கொரு பூம்பொழிலில் இருந்தனராக, அவண்போந்த வம்பப் பரத்தையும் வறுமொழியாளனும், 'காமனும் தேவியுட் போலும் ஈங்கிவர் யாரென அறிகுவம்' எனக் கவுந்தியை வினவ அதற்கு,

"..........என்
மக்கள் காணீர் மானிட யாக்கையர்
பக்க நீங்குமின் பரிபுலம் பினரெனக்." (நாடுகாண் ௨௨௪-௨௬)

கூறினர். அதுகேட்ட அவ்வம்பன் ஒரு வயிற்று உடன் பிறந் தோர்கள் கணவனும் மனைவியு மாவரோ எனக் கேட்க, தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக் காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்கி நிற்கவே, சீற்றமுற்ற தவச்செல்வி,

"எள்ளுநர் போலுமிவர் என்பூங் கோதையை
முள்ளுடைக் காட்டின் முதுநரி யாகெனச்." (நாடுகாண் 231-32)

சாபமிட்டு அந் நயவஞ்சகரை நரியாக்கினர். அத்தகைய தவத்திறன் மிக்கவர் இவ் அறச்செல்வி. நரியாயினமை கண்ட நறுமலர்க்கோதையும் நம்பியும் 'நெறியின் நீங்கியோர் நீரல கூறி னும், அறியாமை என்று அறிதல் வேண்டும்' என இரங்கிக் கூறவே, அவர்கட்குச் சாபவிடை தந்ததும் இவரது தவமேம் பாட்டிற்குத் தக்க சான்றாகும்.

அன்றியும் வசந்தமாலை வடிவில் வந்து கோவலனை மயக்கிய கானுறை தெய்வம்கூடத் தன் தீச்செயலைப் புண்ணிய முதல்விக் குப் புலப்படுத்த வேண்டா என வேண்டிச் செல்கின்றது. கானுறைதெய்வமே கவுந்தியடிகட்கு அஞ்சி நடுங்குகின்றதெனின் அடிகளின் தவ வலியை என்னென்பது?

பணியுமாம் என்றும் பெருமை

இத்தகைய ஆற்றலும் அருஞ்செயலும் மிக்க கவுந்தியடிகளிடத்துக் காணப்பெறும் பண்பு ஆன்றவிந்தடங்கிய கொள்கையும் அடக்கமுமே யாகும். சமய அறிவும் அருளாட்சியும் மிக்கிருந்த நிலையிலும், மறவுரை நீத்த மாசறு கேள்வியர்தம் அறவுரை கேட்கும் விருப்பும், அறிவனை ஏத்தும் விழைவும் இவர்பால் இருந்ததெனின் இவரது அடக்கத்தையும் பெரியோரைப் பேணும் பெற்றியையும் என்னென்பது? தருமம் சான்ற சாரணர் தோன்றியகாலை அவர்கள் அடித்தலத்து வீழ்ந்து வணங்கும் பணிவுடைமையும் பாராட்டற்பாலது.

அன்புரிமையும் அருளுறவும்

அறிந்தார் மாட்டு மட்டும் இதயம் ஈடுபடுவது அன்பாகும். அறியாதாரிடத்தும் அன்பு கொள்வதே அருள் நிலையாகும். இதனையே குறளாசிரியரும் 'அருளெனும் அன்பீன் குழவி' என்றார். இதற்கோர் எடுத்துக்காட்டாக அமைபவர் அடிகள். முன்பின் அறியாது போந்த கோவலன் கண்ணகி இருவர்பாலும் எல்லையில் இரக்கமும், இணையிலா அன்பும் கொண்டு, அவர்களைப் பற்றிக் கூறும்போதுகூட 'என் மக்கள்', 'என் பூங்கோதை' என ஒன்றிய உள்ளத்தோடு உறவாடும் நிலையும், அவர்களைப்பற்றி இன்னாது பேசிய இழிந்தோரை நரியாக்குமளவிற்குச் செல்லும் அன்புரிமையும் அறிந்து இன்புறத் தக்கன.

சமயப்பற்று

திதுதீர் மதுரைக்குரிய நெறி கூறப் புகுந்த மாங்காட்டு மறையோன் பிலத்தின் பெற்றியைக் கூற, அதற்கு அடிகள் 'நலம்புரி கொள்கை நான்மறையாள! பிலம்புகவேண்டும் பெற்றி ஈங்கில்லை' என மறுத்துரைத்து,

"வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவது முண்டோ எய்தா அரும்பொருள்
காமுறு தெய்வங் கண்டடி பணிய
நீபோ யாங்களும் நீள்நெறிப் படர்குதும்."

(காடுகாண். கஙஅ-கூக)

என மொழிந்ததும்,

ஒருமூன் றவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா;
காமனை வென்றோன் ஆயிரத் தெட்டு
நாம மல்லது நவிலாது என்நா;

ஐவரை வென்றோன் அடியிணை யல்லது
கைவரைக் காணினுங் காணா வென்கண்;
அருளறம் பூண்டோன் திருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது;
அருக ரறவ னறிவோற் கல்லதென்
இருகையுங் கூடி யொருவழிக் குவியா;
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
தலைமிசை யுச்சி தானணிப் பொறாது;
இறுதியில் இன்பத்து இறைமொழிக் கல்லது
மறுதர வோதியென் மனம்புடை பெயராது.''

(நாடுகாண் ௧௯௪-௨0௭)

எனக் கூறியதும் இவரது திண்ணிய சமயப் பற்றையும், தருக்க ஆற்றலையும் தெற்றெனக் காட்டுவதாகும்.

எண்ணித்துணியும் புண்ணிய முதல்வி

கண்ணகியை இடைக்குல மூதாட்டியிடம் அடைக்கலம் தரவிழைந்த கவுந்தியடிகள்:

''ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை,
தீதிலள் முதுமகள் செவ்வியள் அளியள்
மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துதற்கு
ஏதம் இன்று.''	(அடைக். ௧௨0-௨௪)

என எண்ணுவதினின்று இவள் எக்காரியத்திலும் எண்ணித் துணியும் இயல்புடையவள் என்றறிகின்றோம்.

புண்ணிய முதல்வியின் புலமைத்திறம்

தான் உற்ற இன்னலை எடுத்தியம்பி வருந்திய விருத்த கோபாலனுக்கு, ''ஒய்யா வினைப்பயன் உண்ணுங்காலைக் கையாறு கொள்ளார் கற்றறி மாக்கள், காமஞ் சார்ந்தாரை ஏமஞ் சாராது, அதனால் வசையும் துன்பமுமே வந்து சேரும்; அவ்வாறே நீயும் துன்புற்றனை. இத்துணை இடும்பை எய்தியோர் எத்துணையோ பேர்'' என இல்வாழ்வுதரும் இன்னலை எடுத்தியம்பி,

''தாதை யேவலின் மாதுடன் போகி
காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ.'' (ஊர்காண். ௪௬-௪௯)

எனவும்,

"வல்லாடு ஆயத்து மண்ணரசு இழந்து
மெல்லியல் தன்னுடன் வெங்கா னடைந்தோன்
காதலிற் பிரிந்தோன் அல்லன் காதலி
தீதொடு படூஉஞ் சிறுமையள் அல்லள்
அடவிக் கானகத்து ஆயிழை தன்னை
இடையிருள் யாமத் திட்டு நீக்கியது
வல்வினை யன்றோ" (ஊர்காண் ௫௦-௫௬)

எனவும் இலக்கிய நாயகன் இராமன், நிடதநாட்டரசன் நளன் முதலியோர் அடைந்த துன்பம் கூறித் தெருட்டும் திறப்பாடு அறியத்தக்கது.

தசரதன் குறையை நிறைசெய்யவும், கைகேயியின் நிறையை முறைமை யாக்கவும் அயோத்தி நீங்கி ஆரணியம் புகுந்தான் இராமன். சூதும் வாதும் வேதனை செய்யவே சொந்த நாடாம் நிடதநாடு நீத்துக் காடு சென்றான் நளன். சலம்புணர் கொள்கையோடு சலதியாடித் தன் செல்வமனைத்தும் இழந்து பொதுவறு சிறப்பின் புகாரினின்றும் தீததீர் தென்னவர் மதுரை யடைந்தான் கோவலன். இங்ஙனம் மூவரும் பிறந்த நாடு துறந்த பேரருள் நெஞ்சத்தினர்; பிரிந்து சிறந்தவர்கள். பிரிந்து செல்லுங்கால் தங்கள் காதல் மனைவியரையும் உடன் கொண்டு சென்ற ஒப்புரவானுயர்ந்த பெற்றிமையாளர்கள்.

இம்மூவரிலே இராமன் தன் மனைவியை மாற்றான் பிரிக்கப் பெருந்துயருற்றான்; இலங்கையர்கோன் செல்வி - சீதாபிராட்டியைக் கவர்ந்து செல்லவே கடுந்துயருற்றான். நளன் தன் மனையாளைத் தானே கானகத்திடை விட்டுப் பிரிந்து வாட்டமுற்றான்; கானகத்திடையே தமயந்தியைப் பிரிந்து நீங்காத் துயரடைந்தான். முன்னவன் தன் மனைவி பிரிக்கப் படத் தனித்துயர் அடைந்தான்; பின்னவனோ தன் மனைவியைத் தான் பிரிந்து தாளாத் துன்பமடைந்தான். இவ்விருவரும் இன்ப வாழ்வின்போது மனைவியரோடு உறைந்து, துன்பவேளையில் காதலியரை நீங்கித் தவித்தனர். ஆனால் கருணை மறவனும் கோவலனோ இன்பியல் வாழ்விலே கற்பின் செல்வி கண்ணகியைப் பிரிந்து, துன்பம் நேர்கையில் அவளோடு கூடித் துன்பம் மறந்திருந்தான். இவ்வளவிலே இம் மூவரிலே கோவலனே கொடுத்து வைத்தவன் எனலாம். இதனையே அறமுதல்வியும் அறிவுறுத்துகின்றார்.

(தொடரும்)

ஓவியம்

[திரு. தி. நா. அறிவு ஒளி]

பொய்யாமொழிப் புலவரியற்றிய இன்பச்சுவை கனிந்த இனிய கவிதை நூலே தஞ்சைவாணன் கோவை. இவர் தொண்டை நாட்டில் செங்காட்டங் கோட்டத்துறையூரில் தோன்றினர். இளமையில் வயிரபுரம் (திண்டிவனத்துக்கு அண்மையில் உள்ளது) என்ற ஊரில் ஒரு தமிழாசிரியர்பால் தமிழ் பயின்றார். இவருக்குச் சிநக்கன் என்பாரிடம் பெருநட்பு இருந்தது. அவர் இறந்தபின் மேலும் உலகில் உயிர்வாழ விழையாது தீப்பாய்ந்து உயிர் துறந்தார் என்பர்.

இவர் மாறைநாட்டை ஆட்சிசெய்த பாண்டிய மன்னரான குலசேகர தேவருக்கு அமைச்சனும் படைத்தலைவனுமான சந்திரவாணன் என்பவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டே தஞ்சைவாணன்கோவையை இயற்றினர். இக்கோவையை அரங்கேற்றும்போது சந்திரவாணன் கோவைக் கவி ஒன்றுக்கு ஒரு பொன் தேங்காய் எனப் பரிசளித்தானாம். இவரைப்பற்றித் தமிழ் நாவலர் சரிதை, சோழமண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், தொண்டைமண்டல சதகம், திருப்புகழ், சேயூர்முருகன் பிள்ளைத் தமிழ் முதலியன பலப்பல செய்திகளைக் கூறுகின்றன. அவை எவ்வளவில் இவர் வரலாற்றோடு உண்மைத் தொடர்புடையன என்பது புலனாகவில்லை!

இந்நூல் நம்பி அகப்பொருளுக்கு மேற்கோள் அமையுமாறு பாடப்பட்டதென்பர். சுவைமிக்க அழகிய பாடல்கள் கொண்ட இந்நூல் (க) களவியல் (உ௱) (உ) வரைவியல் (அகூ) (ங) கற்பியல் (ருகூ) என மூவியலினும் சஉரு செய்யுட்கள் கொண்டது.

திருப்புகழ் பாடிய அருணகிரியாருக்குக் காலத்தால் முற்பட்டவர் இவர். இவர் காலம் ஏறத்தாழ எழுநூறு ஆண்டு என்றும், ஆயிரம் ஆண்டுகட்குமுன் என்றும் பலவாறாகக் கூறுகின்றனர்.

காதற்சுவை கனிந்த இனிய பாடல்களில் உவமைநலன்களும், அணிநலன்களும், விளக்க அழகுகளும், இனிய சொல்லாட்சிகளும் நிறைந்துள்ளன.

முப்பத்துநான்கு பாட்டுக்களில் ஓவியக் குறிப்புக்கள் அளித்துள்ளார் பொய்யாமொழியார்.

எழுதிய பாவை

தமிழ்க் கவிஞர்கள் அழகு வெறிபிடித்தவர்கள். தங்கள் கவிதையால் பெண்டிர் அழகைப் பலப்பல வகைகளில் விளக்கிப் பாடிப் பாடிக் கூட அவர்களுக்கு மனம் ஆறுதலடைவதில்லை. தாங்கள் கூறிய அழகு விளக்கங்களினால் அமைதியடையாத வர்கள். 'ஓவியத்தில் ஒப்பற்ற கலைச்செல்வர்கள் எழுதிய ஓவியம் போன்றவள்' என்று முடித்துத்தான் பெருமூச்சு விடுவார்கள்! தங்களால் செய்யமுடியாத வேலையை மற்றவர்மீது சுமத்தி விடுவது மக்கள் இயல்புதானே! அதேபோலக் காவியப் புலவர் கள் தம்மால் எழுத முடியாததை ஓவியப் புலவர்களால் எழுத முடியும் எனநம்பி, அவர்கள் தலைமீது சுமத்திவிடுவர். அதே போலக் காதலியின் அழகை வியக்கும் காதலன் பாடுகின்ற ஒரு பாட்டு! அதில், "பாண்டியரின் புகழை வளர்க்கக் கூடிய தஞ்சை வாணனுக்கு உரிய மாறை என்ற அழகிய ஊரில்வாழும் பூக்களைக் கோதுகின்ற இலக்கணத்தை அறிந்த வண்டுகள் ஆர்க் கக்கூடிய கூந்தலை உடைய மடமைப் பண்புடைய பெண்டிரே! உம்மிடம் சிறு தொழில்களைச் செய்து வணங்கி இயங்கக் கூடிய, தோழியர் குழாத்தோடு சுனைநீரில் குளிக்காமல் ஓவியப் புலமை மிக்க ஒள்ளிய கலைஞனால் பலவகை வண்ணங்களால் கண் கவரும்படி எழுதிவைத்த ஓவியம் போன்று வாளா நிற்பது என்ன? இப்போது கூறுங்கள்!" எனக் காதலியோடு பேசுவ தற்காக அவளை முன்னிலைப் படுத்துகிறான் தலைவன்,

"வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்தென் மாறைவண்டு
கொழுதியல் ஆர்செய் குழல்மட வீர்நுங்குற் றேவல்செய்து
தொழுதியல் ஆயத் தொகுதியொ டாடிச் சுனைகுடையா
தெழுதிய பாவையைப் போல்நின்ற வான் இயம்புமினே."

(தஞ்சைவாணன் கோவை: எ)

இப்பாடலால் பொய்யாமொழிப் புலவர் காலத்திலும் நஞ் செந்தமிழகத்து ஓவிய மேதைகள் உயிரோவியங்கள் தீட்டி, நாட்டுக் கலைவளத்தை உயர்த்தி இருந்த மாண்பினை அறியலாம்!

புனை ஓவியம்

தமிழ்ப் பெண்டிர் அழகுக் கோயில்கள்! அவர்களின் அழகோ புனைந்த ஓவியம் போல அத்துணை அழகுடையதாம்! தலைவி, தலைவனோடு பெற்றோர்க்குத் தெரியாமல் தன் வீட் டையும், ஊரையும் துறந்து ஓடிவிட்டாள்! (உடன்போக்கு) அத்தலைவியைத் தேடிக்கொண்டு செவிலித்தாய் பாலை நிலத்துக்கு வந்துவிட்டாள். அப்பாலை நிலப்பெண்ணொருத்தியைக் கண் டாள். அவளை 'எயிற்றி' என்பர். எயின இனத்தினள். அவளை

நோக்கிச் செவிலி,'' பலவகை வண்ணங்களால் அழகுற ஒப்பனை செய்து புனையப்பட்ட ஓவியப்பாவை போன்ற அழகு மிகுந்து வருகின்ற இளமகளே! தஞ்சை வாணனின் பகைவர் நெருங்கும் வலியகாட்டில் வாழ்கின்ற மறவரின் அருமையான பெண்ணே! மறத்தாய் வீற்றிருக்கும் தோள்களை உடைய புதியவன் ஒருவன் பின்னே செல்லுமாறு விட்டுவிட்ட என்னுடைய அருமையான ஒப்பற்ற மகள்தானோ நீ என்று ஐயமுற்றேன். ஆனால் நீயோ மறவர் மகளாக இருக்கிறாய்! உன்னைப் போலவே பேரழகும் இளமையும் உடையவள் என்மகள். அதனாலேதான் அவ்வாறு ஐயுற்றேன். என்மகளும், அவள் காதலனும் போன வழி எனக்குத் தெரியவில்லை. ஒருகால் அவள் போகும்போது நீ பார்த்திருப்பின் அவள் சென்ற காட்டு வழியை அருள்கூர்ந்து எனக்குச் சொல்க.'' எனக் கேட்பதாக அழகிய பாட்டை இயற்றியுள்ளார்:

"செருமக ளேயும் புயத்தய லான்பின் செலவிடுத்தென்
ஒருமக ளேஎன் றுனைஅயிர்த்தேன்புனை ஓவியம்போல்
வருமக ளேதஞ்சை வாணன்ஒன் னார்துன்னும் வன்சுரத்தோர்
அருமக ளேஉரை யாய்அவள் போன அதர்எனக்கே."

(த. வா. கோவை: ௩௪௩)

'புனை ஓவியம்' என்பது வண்ணம் தீட்டப்பட்டு முடிந்த வண்ண ஓவியம்! புனையா ஓவியம் என்பது வரைகோட்டு ஓவியம் (கீற்று ஓவியம்) இதனை ஆங்கிலத்தில் Sketch என்பர்! புனை ஓவியம் 'Painting drawing' எனப்படும்.

சின்னம் பொறித்தல்

பண்டைத் தமிழ் மன்னர்கள் தம் கொடிகளில் குறிக்கப் பட்டிருக்கும் உருவத்தைத் தாம் வெற்றி கொள்ளும் இடங் களில் வெற்றிக்கு அறிகுறியாகச் செதுக்கியோ, பொறித்தோ ஓவியந் தீட்டியோ வைப்பது வழக்கம். தஞ்சைவாணன் பாண் டியர் படைத்தலைவனாக இருந்தவன். அவன் தன்வேந்தனாகிய குலசேகர தேவருக்கு வெற்றி உண்டாகுமாறு பலதிசை களிலும் போர்புரிந்து கயற் குறியைத் திசையானைகளின்மீது தீட்டினனாம்!

"என்போன நெஞ்சமு நீருமென் பாதம் இறைஞ்சுதனும்
கண்போலும் எங்கையர் காணினன் றேகயன் மாதிரத்துத்
திண்போ தகந்தோறுந் தீட்டிய வாணன் செழுந்தஞ்சை சூழ்
வண்போ தளவிய நீர்வையை நாட்டுறை மன்னவரே."

(த. வா. கோவை: ௩௯௮)

தமிழ் மன்னர் தம் புகழை மலைகளிலும், கோயில் கருவறை, சுற்று மதிற்சுவர் ஆகியவைகளில் 'கல்வெட்டு' வெட்டி வைப்பது வழக்கம். கல்வெட்டில் தம் வெற்றிகளையும், போர்ப் பெருமைகளையும் பொறிப்பர். இக்கல்வெட்டுத் தீட்டக் கற்கொல்லரும், கல்வெட்டுப் பாட்டியற்றுவோரும் அக் காலத்து அரசியலில் பணிபுரிந்தனர். நாண் பூட்டப்பட்ட வில்லேந்திய மறவரை வெற்றிகொண்டு மாறைநாட்டைச் சூழ்ந்த எல்லா மலைகளிலும் தன் புகழைத் தீட்டினான் தஞ்சை வாணன். இக் கல்வெட்டுத் தீட்டுதலைக் கோவை ௬௫ ஆம் பாட்டில் குறிக்கிறார் புலவர்.

"பூட்டிய வார்சிலை வீரரை வென்றுஎப் பொருப்பினும் சீர்
தீட்டிய வாணன் தென் மாறைஅன்னீர்! இதழ்ச் செம்மையும், மை
ஊட்டிய வாளின் கருமையும் தான்கொண் டுமக்கிங்ஙனே
சூட்டிய வாறுஎன் றுல்முல்லை மாலை சுனைப் புனலே!"

(த. வா. கோவை: ௬௫)

மடற்கிழி

பண்டைக் காலத்தில் ஓராடவன் ஒரு மகளைக் காதல் செய்து, அப்பெண்ணும் அவனை விரும்பியும், அவனைக் கூடுதற்கியலாதெனின், அக்காம ஆற்றாமை மீதூரவே, தம் காம எழுச்சியை வெளியிட மடலூருவர்! எருக்கம்பூ மாலையைத் தலையில் சூடி, பனைமடல் கருக்குகளாற் செய்யப்பட்ட ஒரு பொய்க் குதிரையின்மேல் காற் சதைகள் அறுந்துபட்டு குருதி குழைந்து ஒழுகும் வண்ணம் அம்மடல்மீதேறித் தலைவியின் உருவத்தையும் தன் பெயரையும் ஒரு படத்தில் எழுதிக் கையில் பிடித்துக்கொண்டு அக்காதலியின் வீட்டிற்கு அருகில் நாற்சந்தி முனையில் அக்குதிரையை ஆட்கள் வைத்து இழுத்து வரச்செய்து ஊராருக்குத் தன் காதல் மிகுதியைப் புலப்படுத்துவான் தலைவன், இம் மடலூர் தலை விளக்கமாக,

"மாஎன மடலும் ஊர்ப, பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியுஞ் சூடுப,
மறுகின் ஆர்க்கவும் படுப,
பிறிதும் ஆகுப காமங் காழ்க் கொளினே."

எனக் குறுந்தொகை ௧௭ ஆம் பாட்டுக் கூறுகிறது.

இம்மடலூரும் துன்பியல் நாடகத்திலும் ஓவியக் கலையின் ஒள்ளிய துணை உடனுறைவதை நோக்க வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும், நன்மையிலும் தீமையிலும், செழுமையிலும் வறுமையிலும்கூட ஓவியக் கலையின் ஒண்துணை நம் நாட்டில் இருந்து வந்தமை காண்கிறோம்.

மடலேறும் ஆடவன் தன் காதலியின் எழிலுருவை அழ கொழுகத் தீட்டிக் கொள்கிறான்! அவ்வாறாயின் அக் காலத்து ஓவியக் கலைஞர்கள் உயிரோவியம் தீட்டும் பேரறிவினராக விளங்கிய பெற்றியை அறிகிறோம். ஒருவர் உருவை நிழற்படம் பிடிப்பதினும் இயற்கையாகவும், உள்ளது உள்ளபடியும் ஓவியத்திலேதான் புனையமுடியும்! அத்தகைய ஓவியக்கிழியைக் கையிலே பிடித்தவாறு மடலூர்வதைப் பொய்யாமொழியாரின் மெய்ம்மொழி அழகுறத் தீட்டிக் காட்டுகிறது,

"விரையூர் குழலியர் தந்தசிந் தாகுல வெள்ளம் நிரைக்
கரையூர் பொழுதிளங் காளையர் தாம்கிழி கைப்பிடித்துத்
தரையூர் தொறும்பெண்ணை மாமடல் ஊர்வர்; தவிர்ந்து பின்னும்
வரையூர்வர்; தஞ்சையர் கோன்வாணன் மாறையில் வாள்நுதலே!"

(த. வா. கோவை : ௧0௨)

இப்பாட்டுக் குறிக்கும் 'கிழி' என்ற சொல் ஆங்கிலத்தில் Canvas எனக் கூறப்படுதற்கு ஏற்ற தமிழ்ச் சொல்லாகும். மேற் குறித்த அழகிய 'கிழி' என்ற சொல்லைவிடுத்து சீலை, திரைச் சீலை, 'படவிரிப்பு' எனவெல்லாம் பிறசொற்களை அமைத்து இடர்ப்படுவது இனியேனும் தவிர்க்கப்பட வேண்டும்.

பாவை

பண்டைத் தமிழகத்தில் சிற்பக்கலை பெற்றிருந்த உயர்ந்த தகுதியை எண்ணினால் பெருவியப்பு முகிழ்க்கிறது. ஆகா! கலைகளின் பிறப்பகமே தமிழகம்தான் எனினும் ஓவியக் கலையின் சிறப்பகம் அஃது எனல் நனிசாலும்!

பொய்யா மொழிப் புலவர் பெண்டிர்க்கு உவமையாகப் பல பாடல்களில் ஓவியப் பாவையை எடுத்து ஆள்கிறார். 'ஒப்பற்ற கற்றச்சன்' செதுக்கிய மிக வியக்கத்தக்க பேரெழில் வாய்ந்த பெண்சிலையைப் போன்ற பெண்கள்' என அவர் கூறுவதிலிருந்து அக்காலத்துத் தச்சுக்கலைஞரின் மேதை விளங்கும்.

"பொருமணி வெண்திரைப் பைங்கடல் வங்கம் பொருந்திமுன்பு
தருமணி பின்பெற் றணிபவர் போல்சென்று சார்ந்து இரந்து,
பருமணி நன்கலப் பாங்கியை நீங்கி, அப் பாவையைநாம்
மருமணி வண்டுறை தார்வாணன் மாறை மருவுதுமே."

(த. வா. கோவை : ௬௧)

"தண்பட்டம் மேவும் வயல்தஞ்சை வாணன் தமிழ்ச் சிலம்பில்
பண்பட்ட தேமொழிப் பாவை அன்னீர்! பனை பட்டகையும்
மண்பட்ட கோடும், மதம்பட்ட வாயும், வடிக்கணை தோய்
புண்பட்ட மேனியு மாய்வந்த தோஒரு போர்க் களிறே."

(த. வா. கோவை : எ௨)

"மயனார் விதித்தன்ன மாமதில் சூழ்தஞ்சை வாணன் வெற்பில்
பயனார் பயோதரப் பாவை அன்னீர் ! பசும் பொற்குழை தோய்
நயனார விந்தத்து நஞ்சு, நும்வாய் இதழ் நல்லமுதம்
அயனார் படைத் திலரேல், அடங்காதவ் வரனுக்குமே."

(த. வா. கோவை: கருகு)

"பண்ணும் குழலும் பழித்தசொல் பாவை! பரியல்; எல்லா
மண்ணும் புகழ்தஞ்சை வாணன்ஒன் னார்என மைக்குவளைக்
கண்ணும், கனைஇருள் கங்குலும், மாரன் கணைகள் பட்ட
புண்ணும் புலரவந்தார்தமது ஊர்வயின் போனவரே."

(த. வா. கோவை: உருசு)

"தொடுசிலைக் கானவர் ஓடிய வேற்றுச் சுவடுவையே;
அடுசிலைக் காளை அடிஅவையே; அறிந்தோர் அறிய
இடுசிலைப் பார்புரக்கும் தஞ்சை வாணன் இசைக்குருகப்
படுசிலைப் பாவை பதம் இவையே; வண்டு பாடுகவே."

(த. வா. கோவை: ௩சுகு)

"ஒன்றோ நமக்கு வந்தெய்திய நன்மை! உடன்றெதிர்ந்தார்
வன்றோல் அமர்வென்ற வாள்படை வாணன் தென்மாறையில்வாழ்
நின்றோகை கற்பின் நிலைமைஎண் ணுதெதிர் நின்றுவெந்நிட்
டன்றோ வடக்கிருந்தாள் மடப்பாவை அருந்ததியே?"

(த. வா. கோவை: ௩எச)

"மாவா ரணம்அன்ன வாணன்தென் மாறைநம் மன்னர்நின்னைப்
பாவாய் பணியவும் பார்க்கிலைநீ; இடப்பாக மங்கை
தாவாத சங்கரன் கங்கைதன் கொங்கை தழீஇ,இதழிப்
பூவார் சடைமுடி மேல்வைத்த போதும் பொறுத்தனளே."

(த. வா. கோவை: ௪0க)

பண்டைக் காலத்தில் பொற்கொல்லர்கள் மிகச் சிறந்த பொற்பாவைகள் இயற்றுவர். அத்தகைய பொற்பாவையைப் (Copy) படிஎடுத்தலும் வழக்கமாம். இவ்வரிய வரலாற்றுண்மையைப் பொய்யாமொழிப் புலவர் அழகொழுகக் குறிக்கிறார் க0௪ ஆம் பாட்டில்.

"தொடையேய் எருக்கென்பு நீஅணிந்தால் என்னை? சூல்வளை ஊர்
மடையேய் வயல்தஞ்சை வாணன் வெற்பா! மலரோன் வகுத்த
படையே நயனம் படைத்த பொன்பாவை படிஎடுக்க
இடையேதெனத் தெரியாதுரை ஆணிஇட அரிதே."

(த. வா. கோவை: க0௪)

(தொடரும்)

தீப நாடகங்கள்

[திரு. பா. பச்சையப்பன்]

(செல்வி சிலம்பு, ௩௪, பரல் ௬, ௩00ஆம் பக்கத் தொடர்ச்சி)

[யோகத்தாள் வருகிறாள். மாலையணிந்த இலைக் கொத்தும் தூபமும் ஏந்தியுள்ளன அவள் கைகள்.]

யோகத்: பெருமக்களே, கோயில்களுக்குச் சென்று இவைகளை இட்டு வணங்க வேண்டும் என்று மனங்கொண்டேன். அரசர் மனநிலை மாறுபட்டு நல்லன இவை, தீயன இவை என்று அறியமாட்டாது வருந்துகிறார். அவருக்கு ஆறுதல் சொல்ல ஆற்றாதவளாக இருக்கிறேன். என் இல்லத்திற் கருகே வீற்றிருக்கும் ஒளியுடைய அப்பலத் தெய்வமே! நின்னை முதலில் வணங்குகிறேன். இப்பழியினின்று எங்களைக் காப்பாற்று. எங்களை நடத்தும் பெருந்தலைவ மனந் தடுமாறுவது உண்டு, என்ன நேருமோ என்றஞ் கிறோம், காப்பாற்று!

[பலிக்கல் மீது வைத்து வணங்குகிறாள். கொரிந் தத்திலிருந்து செய்தி சொல்லி வருகிறான்.]

செய்தி சொல்லி: எனக்குப் புதிதானவளே, ஒதிபர் இல்லம் எங்குள்ளது, காட்டுங்கள். நான் அவரைக் காணவேண்டும்.

கோரஸ்: இதுதான் அவர் இல்லம். அவர் உள்ளே இருக்கிறார். இப்பெருமாட்டி அவருடைய மனைவி. அவர் ஈன்ற மக்களுக்குத் தாய்.

செய்திசொல்லி: இவ்வம்மை வாழ்க! அப்பெருமானார் குடி வாழ்க!

யோகத்தாள்: நீங்கள் வாழ்க! ஐயா, உங்கள் அன்புடைமைக்கு நன்றியுடையேன். உங்களுக்கு வேண்டுவதென்ன? அன்றி ஏதேனும் அரசருக்குச் செய்தியுண்டோ?

செய்திசொல்லி: நல்ல செய்திதான் அம்மா: உங்கள் அனைவருக்கும் அவருடைய குடும்பத்திற்கும் நல்ல செய்திதான் அம்மா!

யோகத்தாள்: என்ன செய்தி? யாரிடமிருந்து வந்துள்ளது?

செய்திசொல்லி: கொரிந்தத்திலிருந்துதான். செய்தியில் துன்பங் கலந்துள்ளதேனும் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு.

யோகத்தாள்: அப்படி இன்பமும் துன்பமும் கலந்த செய்தி யாதாகத்தானிருக்குமோ?

செய்திசொல்லி: எங்கள் நாட்டினர் ஒதிபஸை அரசராக்குவர்.

யோகத்தாள்: அரசர் பொலிபர் ஆளவில்லையா?

செய்திசொல்லி: அம்மா, அரசர் பொலிபர் இறந்துவிட்டார். அடக்கமும் ஆயிற்று.

யோகத்தாள்: என்ன! இறந்துவிட்டாரா? ஒதிபரின் தந்தையா?

செய்திசொல்லி: ஆம் அம்மா!

யோகத்தாள்: (தோழியிடம்) பெண்ணே, சென்று தலைவரிடம் இச்செய்தியைத் தெரிவித்து வா. (தோழி செல்கிறாள்) தெய்வ சக்தி எங்குள்ளது? தந்தையைக் கொல்லுதல் கூடாது என்று ஒதிபர் இத்தனை காலமாகத் தம் தந்தையைக் காணாதிருந்தாரே! இன்றோ இயற்கை வழி, முதுமையினால் அவர் இறந்து போனார். ஒதிபருக்குப் பழி இலதாயிற்று!

[ஒதிபன் வருகிறான்.]

ஒதிபன்: அன்பே, என்னை மீண்டும் அழைத்ததேன்?

யோகத்தாள்: இச்செய்தியைக் கேளுங்கள். தெய்வ மொழிதான் என்னவாயிற்று என்று அறிந்துகொள்ளுங்கள்.

ஒதிபன்: யார் இவர்? என்ன செய்தி கொண்டு வந்துள்ளார்?

யோகத்தாள்: இவர் கொரிந்தத்திலிருந்து வருகின்றார். உங்கள் தந்தை பொலிபர் இறந்துவிட்டாராம்.

ஒதிபன்: என்ன ஐயா? நீங்களே சொல்லுங்கள்.

செய்திசொல்லி: உண்மைதான் அரசே. அனைவரும் செல்லும் வழியில்தான் அவரும் இயற்கை எய்தினர்.

ஒதிபன்: சூழ்ச்சியினாலா, அன்றி நோய்வாய்ப்பட்டா?

செய்திசொல்லி: முதுமையினர்க்கு வரும் நோய்தான்.

ஒதிபன்: நோய்வாய்ப்பட்டு இறந்துபோனாரா? அந்தோ! தந்தையே!

செய்திசொல்லி: தம் கடமையை நன்றாகச் செய்து வந்த முதுமையில் இயற்கை எய்தினர்.

ஒதிபன்: நன்று, நன்று, அன்பே. பிதியத்தின் தீ, தெய்வ மொழி, பறவைச் சொல் என்ற இவைகள் என்னவாயின? என் தந்தையை யானே கொல்வேன் என்ற சுடு சொற்கள்! தந்தை இறக்க அடக்கம் செய்யப்பெற்ருர். இங்கு யான் இருக்கிறேன். அவர் வருந்த வாளும் எடுத்திலேன். தெய்வ மொழி பொய்யாயிற்று!

யோகத்தாள்: இத்தனை நாழிகை சொல்லிக் கொண்டிருக்க வில்லையா நான், இவற்றை யெண்ணி மயங்க வேண்டா மென்று!

ஒதிபன்: நீ சொல்லிக் கொண்டிருந்தாய். யான் தான் அஞ்சினேன்.

யோகத்தாள்: இனியேனும் அதை நினைத்து மருளாதீர்கள்.

ஒதிபன்: இன்னும் ஒன்றுள்ளதே என் தாய்.

யோகத்தாள்: அஞ்சுதல் எதற்கு? வாழ்வே இயற்கையின் விளை பின் வருவது யாருக்குத் தெரியும்? இருக்கும் வரையி நன்ருக வாழ்ந்து வரவேண்டும். அன்னையை மணக்க நேரு என்று அஞ்சுவானேன். இவ்வாறு பொல்லாக் கனவு பல ருக்கும் வருவதுண்டு. ஆயின் அவைகளை மனத்திலிருந்து நீக்கிக்கொள்ளவேண்டும், வாழ வேண்டுமாயின்.

ஒதிபன்: அன்னை இறந்தவளாயின் அஞ்சுதற்கில்லை. ஆயின் அன்னை இருக்கும்போது அஞ்சாமல் இருக்க என்னுலிய லாது.

யோகத்தாள்: தந்தை இறந்தவரையில் ஓரளவு மன அமைதி யுற்றதன்ருே?

ஒதிபன்: ஆம். ஆயின், அன்னை இருக்குங்காலத்தே நான் அஞ்சவேண்டியவனே.

செய்திசொல்லி: அரசே, எவரைப்பற்றி அஞ்சுகிறீர்கள்.

ஒதிபன்: அரசர் பொலிபரின் மனைவி அரசி மிரோபி அம்மைதான்.

செய்திசொல்லி: அவ்வம்மையால் தங்களுக்குத் தீமையாவது எப்படியோ?

ஒதிபன்: தெய்வமொழி யொன்றுண்டு. அது மிகவும் அஞ்சு தற்குரியது.

செய்திசொல்லி: என்னைப் போன்ற வேற்ருன் ஒருவனுக்குச் சொல்லத் தகுவதோ அது?

ஒதிபன்: சொல்லத் தகுவதுதான். லோக்கியத் தெய்வம் சொல்லிற்று, என் தாயை மணந்து தந்தையைக் கொல்வேன் என்று. எனவேதான் கொரிந்த நாட்டுக்கு வருவது தடையாகிறது. தாய் தந்தையரை விட்டுப் பிரிவதென்பது துன்பமாயினும், இந்நாள் வரையில் தீமையினின்றும் விலகி நிற்கின்றேன்.

செய்திசொல்லி: இதற்காகத்தான் அரசர் தம்மை நாடு கடத்திக் கொண்டதுவோ?

ஒதிபன்: ஆம். என் தந்தையைக் கொல்லுதற்கு ஆளாகாதவாறு உறுதியுடனிருக்கிறேன்.

செய்திசொல்லி: ஆயின் அச்சத்தினை ஒழியுங்கள். நான் வந்ததும் நல்லதாயிற்று.

ஒதிபன்: என் நன்றி சொல்லத்தரமன்று.

செய்திசொல்லி: நல்லது சொல்லித் தங்கள் நாட்டுக்கு அழைத்துச் செல்வேன்.

ஒதிபன்: நம் நாட்டுக்கா? ஒருபோதும் உடன்படேன்.

செய்திசொல்லி: என் அன்பிற்குரிய இளைஞரே! கேளுங்கள். ஒன்றை உங்களுக்குத் தப்பாக மறைத்து வைத்துள்ளனர்.

ஒதிபன்: அது எப்படியோ? தெய்வத்தின் மேலாணை! உண்மையைச் சொல்லுங்கள்.

செய்திசொல்லி: உங்கள் வீட்டுக்குச் செல்லவொண்ணாது செய்வது இப் பழிதானே?

ஒதிபன்: ஆம். போபஸ் சொல்லிய மாற்றத்தில் எனக்கு நம்பிக்கை உள்ளது.

செய்திசொல்லி: உங்கள் தாய்க்குத் தீங்குநேரும் என்பதுதானே?

ஒதிபன்: ஆம். அதுவே எனக்கு என்றும் துன்பந்தருவது.

செய்திசொல்லி: அவை வீணானவை அரசே! உங்கள் அச்சம் பயனற்றது.

ஒதிபன்: எப்படிப் பயனற்றதாகும்?

செய்திசொல்லி: பொலிபன் தங்கள் தந்தையல்ல.

(தொடரும்)

நாவலர், சோமசுந்தர பாரதியார், ஆய்வறிஞர், சதாசிவ பண்டாரத்தார் நினைவுக் கூட்டம்



அமைச்சர், சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையுரை ஆற்றி நூலை வெளியிடுதல்



செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் பாரதியார் உருவப்படத்தைத் திறந்துவைத்துப் பேசுதல்



பேராசிரியர், கோ. சுப்பிரமணிய பிள்ளை பண்டாரத்தார்
உருவப்படத்தைத் திறந்துவைத்துப் பேசுதல்



நாவலர் பாரதியார், ஆய்வறிஞர் பண்டாரத்தார் திருவுருவப்படங்கள்
திறந்துவைக்கப்பட்டிருத்தல்

நாவலர் பாரதியார், ஆராய்ச்சிப் பேரறிஞர் சதாசிவ பண்டாரத்தார்

நினைவுக் கூட்டம்

[தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 17—2—60 இல் சென்னை இராசாசி மண்டபத்தில் நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் சீரிய தலைமையில், நாவலர் பாரதியார், ஆராய்ச்சிப் பேரறிஞர் சதாசிவ பண்டாரத்தார் ஆகியோரின் நினைவுக் கூட்டம் நடைபெற்றது. அமைச்சரவர்கள் கழகவழி வெளிவந்துள்ள 'நாவலர் பாரதியார்' என்னும் வரலாற்று நூலை வெளியிட்டனர். செட்டிநாட்டரசர் இராசா சர். முத்தையா செட்டியாரவர்கள் நாவலர் பாரதியாரின் உருவப் படத்தையும், பேராசிரியர், கோ. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் சதாசிவ பண்டாரத்தார் அவர்களின் உருவப்படத்தையும் திறந்து வைத்து அப் புலவர் பெருமக்களின் அருந்திறல்கள் பற்றிப் பேசினர். கூட்ட நிகழ்ச்சிகளின் சுருக்கம் பின் வருமாறு :]

கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களின் வரவேற்புரை

சென்னை மாநில நுண்மாண் நுழைபுலமிக்க மதியமைச்சர் அவர்களே! செட்டிநாட்டுப் பேரரசர் அவர்களே! மற்றும் இங்குக் கூடியிருக்குந் தமிழ்ப் பெருமக்களே! இங்கு நாம் இரண்டு பெரிய அறிஞர்களின் பிரிவினை நோக்கி ஒரு நினைவுக் கூட்டத்தை நடத்த இருக்கின்றோம். நாம் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே தமிழ்ப் புலவர்கள் பலர் இருந்தனரென்பதைத் தொல்காப்பியத்திலே " என்மனார் புலவர் " என்று பல சூத்திரங்களிலே கூறப்படுவதுகொண்டு அறிகின்றோம். அதற்கு முன் எத்தனையோ புலவர்களைக் கூற்றுவன் கொள்ளை கொண்டு போயிருக்கின்றான். தொல்காப்பியரையும், தொல்காப்பியருக்குப் பின் வந்த பெரும் பெரும் புலவர்களையும் கூற்றுவன் கொள்ளைகொண்டு போயிருக்கின்றான். இப்போது நாம் வாழ்ந்து வரும் இக்காலத்திலேயே எத்தனையோ புலவர்களை இழந்திருக்கின்றோம். இப்போது கடைசியாக நாம் இரண்டு பெரிய அறிஞர்களை இழந்தமை கருதியே இந்தப் பெருங் கூட்டம் இங்கே கூட்டப்பெறுகின்றது. ஒருவர், டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியாரவர்கள். அவர்கள் தமிழிலே எம். ஏ. பட்டம் பெற்றவர்கள். சட்டத்திலே பி. எல். பட்டம் பெற்றவர்கள். ஆனால் அவர்கள் கடைசிக்காலத்திலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ்ப் பேராசிரியராக இருந்து தமிழ்ப்பணி செய்தவர்கள்.

டாக்டர் நாவலர் பாரதியார் அவர்களை நினைக்கும்போது அவர்கள் ஒரு பெரிய வீரர் என்பதுதான் நம் கண்முன்னே தோன்றும். அவர்களுடன் மிக நெருங்கிய தொடர்புகொள்ளும் வாய்ப்பு எனக்கு 1937ஆம் ஆண்டில் கட்டாய இந்தி தமிழ் நாட்டிலே புகுத்தப்பட்ட அந்தக் காலத்திலே ஏற்பட்டது. அவர்கள் அதுபற்றித் துடிதுடித்ததை யான் நன்கு அறிவேன். அந்தக்காலமுதல் அவர்களோடு மிக நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அவர்கள் அப்போது கட்டாயமாக இந்தியைப் புகுத்திய திருவாளர் இராசாசி அவர்களுக்கு வெளிப்படைக் கடிதமொன்று எழுதினார்கள். அதனை யான்தான் அச்சிட்டு வெளிப்படுத்தினேன்.

அந்தக் காலத்திலே அப்படி அந்த எதிர்ப்பினைத் தெரிவிக்காவிடில் இப்பொழுது தமிழின் நிலைமை வருந்தத்தக்கதாக விருக்கும். வேற்றுமொழி இங்குப் புகுந்து அது ஆட்சி செலுத்தி யிருக்குமென்பதை நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் அதனை எவ்வாறோ உணர்ந்து தமிழ் அதற்குரிய தனி நிலையை அடைந்துவிடின் வேறு எந்த மொழியைப் பற்றியும் நாம் கவலை கொள்ள வேண்டுவதில்லை என்று கருதியே தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வந்துவிட்டார்கள். உயர்நிலைப் பள்ளிவரை எல்லாப்பாடங்களை யும் தமிழில் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருவதுபோல் கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களையும் தமிழில்தான் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தையும் கொண்டுவந்து அதனையும் செயல்படுத்தி வருகின்றனர். ஆகையினாலே வேறு எந்த மொழியும் இதற்குப் புறம்பாகத்தான் இருக்கவேண்டுமே யல்லாது அது வந்து ஆட்சிசெலுத்தவே செலுத்தாது என்ற ஒரு நம்பிக்கை நம் அமைச்சர் அவர்கள் வழியாக நமக்குக் கிடைத்திருக்கின்றது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இனி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்த இராசா சர். அண்ணாமலை செட்டியார் அவர்கள் டாக்டர். நாவலர் பாரதியார் அவர்களின் தகுதி அறிந்து அவர்களை வேண்டித் தலைமைப் பேராசிரியராக அமர்த்தியது பெருமைக் குரியதாகும். அவர்கள் ஓய்வு பெற்றதன் பின்னாலே அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்ததெல்லாம் இங்கே வீற்றிருக்கும் இராசா சர். முத்தையா செட்டியார் அவர்களாவர். நம் பாரதியார் அவர்கள் சில அரிய நூல்களை இயற்றியிருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் நூல்களைப்பற்றி அவர்களுடைய மகனார் ஒன்று தெரிவிக்கும்படி சொன்னார்கள்.

அவர்கள் தாம் எழுதிய நூல்களை மதுரைத் தியாகராசர் கல்லூரிக்கு உரிமையாக வழங்கிவிட்டதோடு, தம் ஆராய்ச்சிக்கெனத் தொகுத்து வைத்திருந்த நூலகத்துள்ள நூல்களை மிக மகிழ்வுடன் மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்கு வழங்கிவிட்டார்களாம். அது மிகவும் போற்றுதற்குரிய அரிய செயலாகும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனிச் சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் கல்வெட்டு ஆராய்ச்சித் துறையில் பெரும் வல்லுநர். அவர்களுக்கு ஒப்பானவர்கள் நம் நாட்டிலே இல்லையென்றே சொல்லலாம். அந்தத் துறையில் மிகவும் அமைதியான பணியைச் செய்தவர்கள். அவர்கள் பிரிவு நமக்கு மிகவும் வருத்தந் தரத்தக்க பிரிவாகும். அவர்களைத் தொடர்ந்து இப்பொழுதும் சிற்சில புலவர்கள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். நாம் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களை ஒன்று வேண்டிக்கொள்ளுதல் வேண்டும்; கல்வெட்டு ஆராய்ச்சிக்கு எனவே ஒரு துறையினை வகுத்து நம்முடைய பல்கலைக் கழகத்திலே இடம் பெறச் செய்தால் மிகவும் நன்றாயிருக்குமென்பது என்னுடைய வேண்டுகோள். அது புறக்கணிக்கக்கூடிய செயலன்று. இதேபோல் ஏட்டுச்சுவடிகளிலுள்ள செய்திகளை எல்லாம் தமிழிலே கொண்டு வருதற்குவேண்டிய தனிப்பட்ட பயிற்சி அளித்தற்கும் ஏற்பாடு வேண்டும். வித்துவான் பட்டம் பெற்றவர்களுக்கு ஓராண்டுப்படிப்பு அதற்கெனவே ஏற்படுத்தி அவர்களுக்கு வேறு அலுவல்கள் கிடைக்கிறபோது, அவர்களுக்கு ஒரு தனிச் சலுகை கொடுப்பார்களேயானால் அவர்கள் கட்டாயம் விரும்பிப் படிப்பார்கள் என்பது அடியேனுடைய கருத்து. அடுத்து இனி இவ்விருபெரும் பெரியார்களைப் பற்றி ஒரு தனிச் சிறப்பு அமைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்விருவரும் ஒரே பல்கலைக் கழகத்தில் அஃதாவது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர்கள். டாக்டர் பாரதியார் அவர்களின் படத்தைத் திறந்து வைப்பதற்கு இராசா சர் முத்தையா செட்டியார் அவர்களும் சதாசிவ பண்டாரத்தார் அவர்களுடைய படத்தைத் திறந்து வைப்பதற்குப் பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் வந்துள்ளார்கள். இனி நாவலரவர்களுடைய மாணவர் இருவர் தமிழ்ப்பேராசிரியை இராசரத்தினம் அம்மையாரும், தமிழ்ப் பேராசிரியர் பூ. ஆலால சுந்தரஞ் செட்டியாரும் இன்று பேசுவர். இனிக் கல்வெட்டுத் துறையிலும் ஆராய்ச்சித் துறையிலும் வல்லுநரான பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்கள் பேசுவார்கள். மதிப்புக்குரிய நிதி அமைச்சர் அவர்களைத் தலைமையுரை ஆற்றும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

நிதி, கல்வி அமைச்சர் பேச்சு

நண்பர்களே! நாம் எல்லாரும் இன்றைக்கு இரண்டு பெரியார்களுக்கு நம்முடைய மரியாதையைத் தெரிவித்துக்கொள்வதற்காக இங்குக் கூடியிருக்கிறோம். இருபெருந் தமிழ்ப் பேரறிஞர்கள் நம்மைவிட்டுச் சமீபகாலத்திலே இயற்கை எய்திவிட்டார்கள். அவர்கள் நினைவு நாளாக இன்றைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே சோமசுந்தர பாரதியாரைப்பற்றி நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை என்று கருதுகின்றேன். தமிழ் நாட்டிலே தமிழ்த் துறையிலே நல்ல பயிற்சி பெற்று அதன் மூலமாகத் தமிழுக்கு ஆக்கம் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே பணியாற்றிய பெரியவர்களிலே சோமசுந்தர பாரதியார் முன்னணியிலே இருந்து வந்திருக்கின்றார்கள் என்பது எல்லாரும் அறிந்தது. இக்காலத்திலே சுதந்திரம் பெற்றதற்குப் பிற்பாடு நம்மிடையே தமிழ் உணர்ச்சி, தமிழ் அன்பு, தமிழுக்கு ஆதரவு ஏற்படுவது இயற்கையாக அமைந்திருக்கக்கூடியது.

ஆனால்; அந்நிய ஆட்சி இருந்த காலத்திலே, ஆங்கில மொழி ஆதிக்கம் இருந்தகாலத்திலே தமிழுக்கு ஆக்கம் கொடுக்கவேண்டிய முறையிலே பல பெரியவர்கள் பாடுபட்ட காரணத்தினாலேதான் தமிழ் இன்று இந்த நிலையில் இருக்கின்றது என்று பெருமைப் படக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறு இல்லாது எல்லாருமே ஆங்கிலமொழி மோகத்திலே மூழ்கி ஆங்கில மொழி கற்றால் போதும், ஆங்கிலத்தில்தான் பேசினால் பெருமை என்கின்ற நிலையிலேயே எல்லாரும் மூழ்கி இருந்திருப்பார்களானால், இன்றைக்குத் தமிழை மறுபடியும் அதற்கு உரிய இடத்தில் நிலைக்குக் கொண்டுவருவது பெரும்பாடாகப் போய்விடும். ஆகையினால்தான் அந்தக் காலத்தில் ஆங்கிலமொழி ஆதிக்கம் இருந்த காலத்தில் தமிழுக்காகப் பாடுபட்டவர்களுக்குத்—தமிழின் உயர்வுக்காகப் பணியாற்றியவர்களுக்கு நாம் பெரு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம். அப்படிப்பட்ட சோமசுந்தர பாரதியார் அவர்கள் சர்வகலாசாலைப் பட்டம் பெற்ற வழக்கறிஞராக வாழ்க்கை நடத்திய காலத்திலும், தமிழின் உயர்வுக்குப் பாடுபட்டு வந்திருக்கின்றார்கள் என்பதை நாம் காண்கிறோம்.

அவர்களுடைய வரலாற்றைத் தெரிவிக்கின்ற முறையிலே இன்றைக்கு நாவலர் பாரதியார் என்ற புத்தகத்தை வெளியிடுமாறு எனக்குப் பணித்திருக்கின்றார்கள். மிக மகிழ்ச்சியுடன் நான் அந்தப் பணியை ஏற்று அந்த நூலை வெளியிடுகின்றேன்.

தமிழ் மக்கள் இந்தப் புத்தகத்தை வாங்கிப் படித்து அதன் மூலமாக நாவலர் பாரதியார் அவர்களுடைய வாழ்க்கையைத் தெரிந்து கொள்வது மட்டுமல்ல; அதன்மூலமாகப் புத்துணர்ச்சி பெற்றுத் தமிழுக்குப் பணிசெய்யக்கூடிய வாய்ப்பைப் பெறுவார்கள் என்று நம்புகின்றேன். பிறந்தவர்கள் எல்லோரும் இறந்துதான் தீரவேண்டும். பாரதியார் அவர்கள் எண்பது ஆண்டுகள் நம்முடனிருந்து அதற்குப்பின் உயிர் நீத்திருக்கின்ருர்கள். அந்த வயதுக்கு மேல் இருப்பவர்கள் ஒரு சிலரே. பெரியவர்கள் பிரியும்போது நாம் கொள்ளவேண்டிய உறுதி அவர்கள் எந்த லட்சியத்திற்காகப் பாடுபட்டார்களோ, எந்த மொழி உயர வேண்டுமென்று அவர்கள் விரும்பினர்களோ அதற்காகத் தொடர்ந்து பாடுபடக்கூடிய ஓர் உறுதியை நாம் மனதிலே ஏற்படுத்திக்கொள்ள விரும்பினுல்தான் அவர்களுக்கு நல்ல முறையிலே மரியாதை செய்பவர்களாவோம். ஆகையினுல் இன்றைக்கு இருக்கக்கூடிய இளைஞர்கள் அவர்களுடைய பரம்பரையிலே வருகின்ற எல்லோருமே தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடுவோம் என்கின்ற உறுதியை இந்த நினைவு நாளிலே உறுதிப்படுத்திக்கொள்வது மிகவும் பொருத்தமாக இருக்குமென்ற கருத்தைத்தான் உங்கள் முன்னிலையில் வைக்க விரும்புகின்றேன். அவ்வாறு தமிழ் மேலும் மேலும் வளர்ச்சியுறக்கூடிய துறையிலே நாம் எல்லோரும் பாடுபடுவதற்கு முயற்சி செய்யவேண்டும். இதிலே கருத்து வேறுபாடு இருப்பதற்கு இடமில்லை என்பது என் துணிபு. யார் யாரைக் கேட்டாலும் இன்றைக்குச் சுதந்திர இந்தியாவிலே வாழுகின்ற ஒவ்வொருவரும் இந்தியாவிலே இருக்கக்கூடிய பல்வேறு மொழிகளும் வளர்ச்சியுற்று முன்னிலைக்கு வரவேண்டுமென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்வார்கள். அதன் காரணத்தினுல்தான் நம்முடைய அரசியல் சட்டத்திலேகூட இந்தியாவிலே இருக்கக்கூடிய எல்லா மொழிகளையும், முக்கியமான மொழிகளையும் தேசிய மொழியாக ஏற்றுக்கொண்டு அந்தத் தேசீய மொழியெல்லாம் மேலும் மேலும் வளர்ச்சியுற வேண்டிய முறையிலே சர்க்காரும் மக்களும் பாடுபடவேண்டுமென்று அரசியல் சட்டத்திலேயே விதித்துக்கொண்டிருக்கிருேம். அதிலே ஒன்றிற்கொன்று போட்டி இருக்கக்கூடியது என்பது இல்லை. ஒருமொழிக்கு இன்னொரு மொழி போட்டி இருக்கவேண்டுமென்ற அவசியமுமில்லை. அந்தந்த மொழிகள் அதனதனுக்குரிய இடங்களிலே அமர்ந்துகொண்டு எல்லாருக்கும் பயன்பட வேண்டுமென்பதைத்தான் நம்முடைய அரசியல் சட்டத்திலே வகுத்துக்கொண்டிருக்கின்றோம். அந்த முறையில் தமிழ்நாட்டிலே தமிழ் மூலமாகத்தான் எல்லாக் காரியங்களும் செய்யப்படவேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க

முடியாது. ஆனால் உடனடியாக அதை நிறைவேற்றுவதிலே சில இன்னல்கள் இருக்கின்றன என்று சொல்லும்போது அனேகமாக அதிலும் கருத்து வேறுபாடு இல்லை என்பதைச் சொல்ல விரும்புகின்றேன். ஏனென்றால் பல நூற்றாண்டுகள் பல துறைகளில் தமிழ் வழங்கப்படாத காரணத்தினாலே சில துறைகளிலே தமிழ் மூலமாகக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும், பாடங்களைப் போதிப்பதற்கும் சில குறைகள் இருக்கலாம் என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அந்தக் குறையை எப்படித் தீர்ப்பது என்பதைப் பற்றித்தான் நாம் இன்று ஆராய்ந்து அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றோம். இன்றைக்கு எந்த மொழியானாலும் உலகிலே முதன்மை பெற்றிருக்கின்றது என்றால் எந்த அடிப்படையில் முதன்மை பெற்றிருக்கின்றது என்பதை ஆராயக் கடமைப்பட்டிருக்கின்றோம். அந்த முறையிலே தமிழும் வளர்வதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்கவும் கடமைப் பட்டிருக்கின்றோம். இன்றைக்கு ஆங்கில மொழி உலகத்திலே பல்வேறு பகுதிகளுள்ளும் எல்லாராலும் பயிலப்பெற்று உலகத்திலே முதன்மை மொழியாகப் பயன்பட்டுவருகின்றது. எந்தக் காரணத்தினாலே ஆங்கிலம் இப்படிப்பட்ட முதலிடம் பெற்றிருக்கின்றது என்று பார்த்தால் ஏதோ நம்மை ஆண்ட ஆங்கிலேயர்களுடைய மொழி என்ற காரணத்தினால் அல்ல. அப்படியிருந்திருந்தால் இன்றைக்கு அது இந்தியாவோடு மட்டும் இருந்திருக்கும். அன்றிருந்த ஆட்சியாளர்கள் இங்கு ஆங்கிலத்தைப் புகுத்திய காரணத்தினால் இங்கு ஆங்கிலத்திற்கு ஒரு தனி மதிப்பு இருக்கிறது என்று சொன்னால் அவர்கள் வெளியேறியவுடனேயே நாம் ஆங்கிலத்தை விட்டிருக்கவேண்டும். இன்றைக்கு அவர்கள் ஆட்சியின்கீழ் இருந்த இந்தியாவில்மட்டுமல்ல; உலகத்திலேயே இருக்கின்ற பல்வேறு நாடுகளிலும் ஆங்கிலத்தை விரும்பிப் படிக்கின்றார்கள் என்பதைப் பார்க்கின்றோம். சமீப காலத்திலே ரஷ்யாவிலிருந்து ஒரு குழுவினர் இங்கு வந்திருந்தார்கள். அவர்கள் அங்கு என்னென்ன மொழிகள் கற்றுக் கொள்கிறார்கள் என்பதுபற்றி விசாரித்தேன். அவர்கள் சொன்னார்கள் : அங்கிருக்கின்ற மொழியைவிட மேலாக ஐரோப்பிய மொழி ஒன்றைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறினார்கள். அந்த ஐரோப்பிய மொழிகளிலே எந்த மொழியை அவர்கள் அனேகமாகக் கற்றுக்கொள்கிறார்கள் என்று கேட்டபோது இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் பெரும்பகுதியினர் ஆங்கிலத்தையே விரும்பிப் படிக்கின்றார்கள் என்று சொன்னார்கள். எந்தக் காரணத்தில் இன்றைக்கு ஆங்கில மொழியை எடுத்துக் கொள்ளுகிறார்களெனின் எந்தத் துறையிலே வேண்டுமானாலும்

சரி, பழங்காலக் கருத்துக்கள் முதற்கொண்டு தற்காலக் கருத்துக்கள் வரை விளக்கக்கூடிய பல நூல்கள் இருப்பதனாலேதான். இன்றைக்கு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வருடமும் ஆங்கிலத்தில் பல நூல்கள் வெளிவந்துகொண்டே இருப்பதால் ஆங்கிலத்தைத் தெரிந்திருந்தால் அக் கருத்துக்கள் மொழி பெயர்ப்பு இல்லாமலே உடனே படித்துக்கொள்ளலாம் என்ற காரணத்தால் ஆங்கிலத்தைப் படிக்கின்றனர். அதே முறையில் நம்முடைய தமிழுக்கும் பெருமை வரவேண்டுமென்றால் பல்வேறு துறைகளிலும் புதிய புதிய கருத்துக்கள் தெரிவிக்கும் நூல்கள் வெளிவரவேண்டும். அந்த நிலைமை எப்படி ஏற்படுத்துவது என்பதுபற்றித்தான் நாம் எல்லாரும் ஆலோசனை செய்ய வேண்டுவது அவசியம் இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமை ஏற்படவேண்டுமானால் தமிழ் இப்படிப் பல துறைகளில் வழங்கப் பட்டால்தான் அத்துறைகளில் நூல்கள் பெருகும். இன்றைக்கு உலகத்திலேயே எல்லாரும் விஞ்ஞானத் துறையில் முன்னேற வேண்டும் என்று கருதுகின்றார்கள் விஞ்ஞானத்துறையில் ஆராய்ச்சி செய்து புதிய புதிய கருத்துக்களை எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றார்கள்.

ஆகையினாலே இன்றைக்குத் தமிழிலே விஞ்ஞான நூல்கள் வரவேண்டியது அவசியம். கணித நூல்கள் வரவேண்டியது அவசியம். பொறியியல் நூல்கள் வரவேண்டியது அவசியம். வரலாற்று நூல்கள் வரவேண்டியது அவசியம். ஆராய்ச்சி நூல்கள் வரவேண்டியது அவசியம். பல்வேறு நூல்களும் நம்முடைய தமிழிலே வரவேண்டுது மிகவும் அவசியம். அதை ஏற்படுத்தவேண்டுமென்று சொன்னால், அஃது இயற்கையாக ஏற்பட்டுவிடும் என்று சொல்லுவது தவறு. அதற்காக ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டுவது அவசியம். அதற்காகத்தான் இன்றைக்குக் கல்வி எல்லா அளவிலும் தமிழிலே இருக்க வேண்டும் என்று சொல்வது ஏதோ தமிழ்ப் பித்துப்பிடித்ததினால் அல்ல, தமிழ் வெறி பிடித்ததினால் அல்ல. இன்றைக்குத் தமிழுக்கு இப்படிப்பட்ட ஓர் இடம், இப்படி வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற நிலை, இந்தமாதிரி எல்லாத் துறைகளிலும் அதை உபயோகிக்க வேண்டிய காரணத்தினால்தான் தமிழுக்கு இந்த உயர்வு ஏற்படும் என்பதைக் காண்கிறோம். இன்றைக்கு விஞ்ஞான நூல்கள் தமிழிலே வரவேண்டுமென்று சொன்னால் விஞ்ஞானம் படிக்கவேண்டியவர்கள் எல்லாரும் ஆங்கிலத்தில் படித்தாகவேண்டும். ஆகவே விஞ்ஞானக் கருத்துக்கள் ஆங்கிலத்திலே படித்து, ஆங்கிலத்திலே எழுதி, ஆங்கிலத்திலேயே குறித்து வைக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. அதைத் திருத்தித் தமிழுக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால் எவ்வளவு

கஷ்டம் இருக்கிறது என்பது ஆங்கிலத்திலே சில கருத்துக்களைப் படித்து அதைத் தமிழிலே சொல்ல முயற்சி செய்யும்பொழுது அதில் இருக்கக்கூடிய கஷ்டம் நன்றாகத் தெரியும். ஆகையினால் தான் இன்றைக்குத் தமிழுக்கு முன்னேற்றம் அடையவேண்டும் என்று சொல்லும்பொழுது போதனாமொழி தமிழ் மொழியாக எல்லா ஊர்களிலும் அமைவதென்ற இந்தக் காலத்திலேதான் உண்மையான தமிழ் வளர்ச்சி ஏற்படமுடியும். அதற்கான நூல்களும் வரமுடியும் என்பதை நாம் காண்கின்றோம். அதை அனுசரித்துத்தான் இன்றைக்குத் தமிழ்மொழி போதனா மொழியாக ஏ* கல்லூரிகளிலும் ஏற்பாடு செய்யவேண்டும் என்கின்ற கருத்தும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கிறது. ஏன், தமிழ் போதனாமொழியாக வருவது இன்றைக்குத் தவறு என்று சொல்லுபவர்கள்கூட அவர்களைக் கேட்போமானால் தமிழ் இதே மாதிரிதான் இருக்கவேண்டுமா? என்றைக்குமே ஆங்கிலத்தைப் போதனாமொழியாக வைத்துக்கொண்டிருக்கவேண்டுமா? என்று சொன்னால், இல்லை பிற்காலத்தில் வரவேண்டுவது அவசியந்தான் என்று அவர்கள் சொல்லுவார்கள். ஆகையினாலே இந்த லட்சியத்தை யாரும் மறுக்கமாட்டார்கள் என்ற காரணத்தினால்தான் நாம் மகிழ்ச்சியுறுகின்றோம். அப்படி அதிலே கருத்து வேற்றுமை இல்லையென்று சொன்னால் இதைப் போதனா மொழியாகக் கொண்டுவர எந்த முயற்சிகள் செய்யவேண்டுமென்பது பற்றியும் நாம் இன்றைக்கு ஆராயக் கடமைப்பட் டிருக்கின்றோம். பெரியவர்கள் எல்லாரும் நாட்டினுடைய மக்களுடைய அறிவுத் திறன் குறைந்துவிடக்கூடாது என்று சொல்லுகிறவர்கள் எல்லாரும் இன்றைக்குச் சொல்லக்கூடிய தமிழிலே போதுமான நூல்கள் இல்லை. அதன் காரணத்தினாலே இன்றைக்குத் தமிழ் மொழி போதனாமொழி ஆகும்பொழுது அறிவுத்திறன் குறைந்துவிடுமோ என்று அவர்கள் உண்மையிலே கவலைப்படுகின்றனர். அவர்கள் கவலைப்படுவதும் ஏதோ அவர்கள் சொந்த நன்மைக்காக அல்ல. நாட்டினுடைய நன்மைக்காக என்பதையும் நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன். ஆனால் இன்றைக்குக் கடைசியில் தமிழ்மொழிதான் போதனா மொழியாக இருக்க வேண்டும் என்கிறபோது ஏதோ ஒரு சமயத்தில் ஆரம்பம் செய்துதான் ஆகவேண்டும்.

இந்த நூலை வெளியிடுவதினால் நாவலருக்கு ஒரு புதிய பெருமை வந்துவிடுவதாக நான் எண்ணவில்லை. இதன் மூலமாக நமக்கு ஒரு புதிய துணிபு. நமக்குரிய ஓர் ஆர்வம். ஒரு பெரிய உற்சாகம் நமக்கு ஏற்படக்கூடிய இந்த நிகழ்ச்சிகள் அமைய வேண்டும் என்கின்ற முறையில்தான் இந்த நினைவுநாள் கொண்

* முதல்தரக் கல்லூரி.

டாடுவதற்குச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் இங்கு ஏற்பாடு செய்திருக்கின்றார்கள் என்று நான் நம்புகின்றேன். அந்த முறையிலே இந்த நன்னாளிலே இந்த இரண்டு பெரியார்களுடைய நினைவு நாளிலே தமிழினுடைய முன்னேற்றத்திற்காக எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைவதற்காக நாம் பாடு படுவோம் என்ற உறுதியை எடுத்துக்கொண்டு அந்த ஒரு உறுதியுடன் மட்டும் நின்றுவிடாமல் நாம் எடுத்துக்கொண்ட உறுதி நிறைவுறும் முறையில் பணியாற்றவேண்டுமென்று எல்லாத் தமிழ்ப் பெருமக்களையும் கேட்டுக் கொண்டு, தமிழ்ப் பெருமக்களுடைய முறையிலே மட்டுமன்றி, எல்லாருடைய பணியாகவும் இருக்கவேண்டுமென்ற முறையிலே ஏனென்றால் இன்றைக்குத் தமிழ் வளரவேண்டுமென்று சொல்லும்பொழுது தமிழ் அண்டையிலே இருக்கின்ற மற்ற மொழிகளும், இந்தியாவில் இருக்கக்கூடிய எல்லா மொழிகளும் வளரவேண்டு என்றுதான் நான் விரும்புவது. ஆகையினாலே இது ஒன்றை தள்ளிவிட்டு இன்னொன்று வளரவேண்டும் என்ற அடிப்படையில்லாது எல்லா மொழிகளும் வளரவேண்டும் என்று சொல்லும் பொழுது நமக்கு உரிய மொழியாய தமிழ்மொழி வளர்வதற்கு நாம் பணியாற்றக் கடமைப்பட்டிருக்கின்றோம் என்ற முறையிலே மேலும் மேலும் சிறக்கவேண்டும். அந்தச் சிறப்புப் பணி சிறப்புறுவதற்கான ஒரு பெரிய உற்சாகம் இந்த நினைவுநாளிலே ஏற்படவேண்டும் என்று எல்லோரையும் கேட்டுக்கொண்டு நாவலர் பாரதியார் அவர்களுடைய இந்த வரலாற்று நூலை வெளியிடுகின்ற பெரும் பணியை எனக்குக் கொடுத்ததற்காக எல்லாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்தப் படத்தைத் திறந்துவைப்பதற்கு இராசா சர். முத்தையா செட்டியார் அவர்கள் இங்கு வந்திருக்கின்றார்கள். அவர்கள் இந்தப் படத்தைத் திறந்துவைப்பது மிகவும் பொருத்தமாகும். ஏனென்றால் பாரதியார் அவர்கள் அவர்களுடைய பல்கலைக் கழகத்திலே பேராசிரியராகப் பணியாற்றியவர்கள். அப் பணியாற்றுவதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள் முத்தையா செட்டியார் அவர்கள். ஆகையினால் அவர்கள் இதைத் திறந்துவைப்பது மிகவும் பொருத்தமாகவும் இருக்கும் என்பது. அதே சமயத்தில் இந்தத் தமிழ்த் துறையிலே அதுவும் தமிழ் போதனா மொழியாகவேண்டும் என்பதிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முன்னணியிலே இருக்கவேண்டும் என்ற கருத்தை அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு பேராசிரியர்களைத் தமிழ்ப் பாடங்கள் சொல்லிக் கொடுப்பதற்குமட்டும் ஏற்பாடு செய்வது மட்டுமல்ல, மற்றப் பாடங்களையும் தமிழிலே சொல்லிக் கொடுப்பதற்கான ஒரு முயற்சியை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வழி

காட்டியாக இருந்தால் எந்த நோக்கத்தைக் கொண்டு அப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டதோ அந்த நோக்கமும் நிறை வேறும் என்ற கருத்தையும் இன்றைக்கு ஏற்புறுத்திக்கொண்டு செட்டியார் அவர்களைப் படத்தைத் திறந்துவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தலைவர் முன்னுரைக்குப் பின் இரு பேரறிஞர்களைப் பற்றி யும் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரைப் பிள்ளை (எம்.ஏ., எல்.டி., உதவியாசிரியர் ஆங்கிலத் தமிழ் அகரவரிசைக்குழு) அவர்களும், தமிழ்ப் பேராசிரியை இராசரத்தினம் அம்மையார் எம்.ஏ., எல்.டி., (லேடிவில்லிங்டன் ஆசிரியைப் பயிற்சிக்கல்லூரி) அவர்களும், தமிழ்ப் பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், எம்.ஏ., (தமிழ்த்துறைத் தலைவர் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்) அவர்களும் சுருக்க விளக்கமுந் தெளிவும் அமையப் பேசினார்கள்.

கழக ஆட்சியாளர் திரு. வ. சு. அவர்கள் வந்துள்ள கையறு நிலைச் செய்திகளைச் சுருங்கக் கூறி நன்றி மொழிந்தனர். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவுற்றது.

பாரதியார், பண்டாரத்தார் இவர்களின்

நினைவுக்கூட்டக் கையறு நிலைகள்

இரு பேரறிஞர்களின் நினைவுக்கூட்டக் கையறு நிலையாகத் தில்லி முதல் கன்னியாகுமரிவரையுள்ள பல்வேறு மாவட்டம், வட்டம், பேரூர், சிற்றூர் முதலிய இடங்களில் வாழும் பெருநிலக் கிழார், வணிகப் பெருஞ்செல்வர், அரசியற்றலைவர், ஆட்சித் துறையினர், கல்லூரி உயர்நிலைப்பள்ளி, பல்கலைக் கழகம் முதலிய வற்றில் பணிபுரியும் முதல்வர், பேராசிரியர் முதலியோர், பெரும் புலவர் ஆகிய பல்லோரிடமிருந்து நூற்றுக்கு மேற்பட்ட கடிதங் கள், கம்பிச் செய்திகள் வந்துள்ளன. அவர்கள் அனைவர்களுக்கும் சங்கத்தாரின் நன்றி என்றும் உரித்தாகுக.

அக்கையறு நிலைகளிற் சில வருமாறு :

"நாவலர் பாரதியாருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றவர்களுள் யானும் ஒருவன், பேரறிஞர் சதா சிவ பண்டாரத்தாரின் ஆராய்ச்சியைப்பற்றி அறியாதவரும் சிலரே. இவ்விரு கலைஞர்களும் தமிழன்னைக்குச் செய்திருக்கும் தொண்டுகள் விவரணைக் கடங்கா. அன்னோரின் பிரிவு தமிழ்

நாட்டிற்கே ஏற்பட்ட ஒரு மகத்தான நட்டம் என்றதாகக் கூற வேண்டும். அப் பெரியார்கள் மறைந்தபின் நாம் ஒவ்வொருவரும் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதே அன்னேருக்கு நாம் செய்யுங் கைம்மாறு ஆகும்.''

டாக்டர், ப. சுப்பராயன், போக்குவரத்து அமைச்சர், புதுதில்லி.

மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், விழா இனிதே நிகழ்ந்தேற எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வழுத்துகின்றேன்.''

கருமுத்து தியாகராசன், மதுரை.

"இருபே ரறிஞர் இரங்கற் கூட்டம்
அருமை மிக்க அமைச்சர் தலைமையில்
திருமிகு தமிழர் செட்டிநாட் டரசரும்
பெருமை வாய்ந்த பேரறி வாளரும்
ஒருங்கே கூடி உரைபல நிகழ்த்திக்
கருதிய தமிழர் கடமை யுணர்ந்தோர்
என்பதை உலகிற் கெடுத்துக் காட்டி
விழாவும் இனிதே விளங்க
வேண்டுவன் இறைவனை வேண்டுவன் யானே
வாழ்க பாரதியார்,—பண்டாரத்தார் புகழ்.

கி. பழனியப்பன், தமிழ்ச்சங்கம், மதுரை.

மற்றும் கீழ்க்காணும் பெருமக்களிடமிருந்தும் இரங்கற் செய்திகள் வந்துள்ள,

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர், பண்டிதமணி லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்; தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்காரியதரிசி, M. D. தியாகராஜ பிள்ளை M. L. A; திருநெல்வேலி, ம. தி. தா. இந்துக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர், பொ. முத்தரசு எம். ஏ.; கோவை புலவர் நா. சுந்தரராசன்; திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத்தலைவர், V. I. சுப்பிரமணியம் M.A., PH.D., சேலம் செவ்வாய்ப் பேட்டை தமிழ்நெறி விளக்கப் பதிப்பக ஆசிரியர், ஆ. மாணிக்கம்; அமராவதிபுதூர், ராய. சொக்கலிங்கன்; திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், பண்டித வித்துவான், சித்தாந்த நன்மணி, கு. சுந்தரமூர்த்தி; புதுக்கோட்டை சகோதரி பிருந்தாதேவி; சேலம் திருவள்ளுவர் கழகம்; பவானி திருமுறைக் கழகம்; சென்னை மாணவர் மன்றம்.

இராயபுரம், தென் இரயில்வே தமிழ் மன்றப்

பொங்கல் விழா

இவ்விழா இராயபுரம், இரயில்வே படிப்பகத்தில் 6-2-60 சனிக்கிழமை மாலை 5 மணிக்குத் தென்னக இரயில்வே, சென்னை வட்டார மேற்பார்வையாளர் உயர்திரு. எஸ். இராஜகோபாலன் அவர்கள் தலைமையில் மிக்க சிறப்பாக நடைபெற்றது. கூடிய பேரவையினருக்குச் சிற்றுண்டி வழங்கப் பெற்றது. கூட்டத்திற்கு இரயிற்றுறையில் அலுவல் புரியும் பெண்பாலார் பலர் வந்திருந்தனர். இவ்வருகை தமிழ்முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் குறிப்பதாகும். இம் மன்றத்தார் சனிக்கிழமை தோறுந் திருக்குறள் வகுப்பும் ஆய்வும் நிகழ்த்துகின்றனர்.

கடவுள் வாழ்த்துடன் துவங்கப்பெற்றது. தலைவர் அழகிய தொரு முன்னுரை மொழிந்தனர். கழகப் புலவர் சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாத பிள்ளையவர்களின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டிச் சிறப்புச் செய்தனர். இரயில்வேத் துறையில் உயர்ந்த அலுவல்களைப் பார்த்துவரும் தமிழார்வமிக்க பலரும் தத்தம் அலுவல்களுடன் தனிப்பட்ட முறையில் தாமாகவே முயன்று கற்று 'வித்துவான்' தேர்வில் வெற்றி பெற்றுத் திகழ்கின்றனர். அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தனர். அவர்தம் தமிழார்வமும் உலையா உழைப்பும் உவந்து பாராட்டற் குரிய. இத்தகைய ஆர்வம் ஏனைத் துறைகளில் பணிபுரிவார்க்கும், இத்துறையில் பணிபுரிந்துவரும் மற்றையோர்க்கும் உண்டாவதாக. இத்தன்மை தமிழ் தொன்னிலை மேன்மையினை எய்துதற்கும், செழித்தோங்கி வளம் பெறுவதற்கும், ஏனையாரைத் தூண்டுவதற்கும் வழிகோலுவதாகும்.

அறிமுகம் செய்யப்பெற்ற வித்துவான் பட்டமெய்திய அன்பர்கள்: அ. சின்னண்ணன் (GM (P)/O/MAS) கே. வி. சச்சிதானந்தம் (DPM/O/BZA) ப. வரதராசன் (ASM/KOK). க. மு. துரைசாமி (COS/O/; Per) ரா. கண்ணன் (DAO/O/RPM).

பின் இராமநாத பிள்ளையவர்கள் பாராட்டியமை பற்றி அன்புரை பகர்ந்தனர். மறைமலையடிகளார் படத்தினைப் புலவர், முருகவேள் M. A., M. O. L., (தமிழ் விரிவுரையாளர் கிறித்துவக் கல்லூரி தாம்பரம்) திறந்துவைத்து அடிகளாரைப் பற்றிப் பேசினர். கடவுள் வாழ்த்தும் நன்றியும் மொழியக் கூட்டம் இனிது நிறைவுற்றது.

Statement about ownership and other particulars about the journal--Senthamil Selvi—as required by rule 8 of the Registration of News papers (Central) Rules, 1956.

FORM IV

1.	Place of publication	1/140, Broadway, Madras-1.
2.	Periodicity of its publications	Monthly
3.	Printer's name	Appar Achakam
	Nationality	
	Address	2/140, Broadway, Madras-1.
4.	Publisher's Name	The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Ltd.,
	Nationality	
	Address	1/140, Broadway, Madras-1.
5.	Editor's Name	Sri. V. Subbiah Pillai
	Nationality	Indian
	Address	1/140, Broadway, Madras-1.

6. Names and addresses of individuals who own the news paper and partners of shareholders holding more than one percent of the total capital.

1. Sri. P. Muthukaruppa Pillai, **Thamaraikulam,** (Kanyakumari Dist.)

2. Sri. T. S. Ramalingam Pillai. M.A., B.L., Sub Judge, **Nagercoil,** (Kanyakumari Dist.)

3. Sri. T. Vairamuthu,
,, T. Thirunavukarasu (Minors)
By Guardian:
Sri. V. Subbiah Pillai,
6, Coral Merchant Street,
Madras-1.

4. Sri. V. Subbiah Pillai, 6, Coral Merchant Street, **Madras-1.**

5. Srimathi S. Mangayarkarasi Ammal 6, Coral Merchant Street, **Madras-1.**

6. Sri. R M. S. Gopalakrishna Pillai, Land Lord, **Sathankulam.** (Tirunelveli Dist.)

7. Sri. M. K. Sivagaminatha Pillai, Fourth Floor, Broche Buildings, Princess Street, **Bombay-2.**

8. Sri. N. S. Sundaram, Bar-at-Law, 134, South Raja Street, **Tuticorin,** (Tirunelveli Dist.)

9. Sri. M. Kasiviswanathan Chettiar, Banker. **Paganeri,**

10. Srimathi, K. Lakshmi Achi, w/o. Sri. M. Kasiviswanathan Chettiar, **Paganeri,** (Ramnad Dist.)

11. Sri. PR. AL. M. N. Narayanan Chettiar, Proprietor, Paari Achakam, 127, Broadway, **Madras-1.**

12. K. V. AL. RM. Ramanathan Chettiar, Correspondent and Trustee, Dr. Alagappa Chettiar Endowments Trust, **Karaikudi,** (Ramnad Dist.)

13. Sri. RM. K. RM. Ramaswamy Chettiar, **Thittai,** (Tanjore Dist.)

14. Messrs. V. D. Nagappa Chettiar and N. Meenakshi Atchi **Valampuri,** (Trichy Dist.)

15. Sri. C. T. Chidambaram Chettiar, **Valampuri,** (Trichy Dist.)

16. Srimathi Valliammai Achi, W/o Sri Kannappa Chettiar, **Nattarasankottai,** (Ramnad Dist.)

17. Sri. T. S. Viswanatha Pillai, C/o T. V. Lakshmanasami, B. E. Inspector of Factories **Coimbatore.**

18. Sri. C. M. Ramachandran Chettiar, B.A., B.L., Advocate, Tiruchi Road, **Coimbatore.**

19. Sri. T. S. Jambulingam Chettiar, Tirupur House, **Coimbatore,**

I, V. Subbiah Pillai, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

4—3—1960

V. SUBBIAH PILLAI,
Signature of Publisher,

மதிப்புரை

'விக்ரக ஆராதனையில் விளக்கம்''

[திருவருள் தவநெறி மன்ற வெளியீடு. ஆசிரியர்: மதுரை, திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் 291 ஆவது குருமகாசந்நிதானம். திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகபரமாசாரிய சுவாமிகள். இதன் விலை காசு 50.]

அடிகளார் திருவருட் பணிக்கென்றே தோன்றிய படியிலாவடிவினர் என்பது அவர்கள் அந்நாள் தொட்டு ஆற்றிவரும் அருந்தொண்டுகளால் அறியலாம். அவற்றுட் சில வருமாறு: திருவருள் தொண்டர் சபை குலசேகரன் பட்டினம், திருவருள் உயர்நிலைப்பள்ளி குலசேகரன் பட்டினம், திருவருள் தவநெறி மன்றம் மதுரை, இந்து தர்மப் பிரசார சங்கம் சென்னை என்பன. இவற்றை நிறுவி இவை எந்நாளும் முட்டின்றி நிகழ வேண்டும் வைப்பு முதலியன உதவித் தலைவராகவும் வீற்றிருந்து. ஒல்லும் வகை நேரிலெழுந்தருளி அருமறை பகர்ந்து அரன்பணி புரிந்து வருவது உலகறிந்ததொன்றே.

அவர்கள் நெடுநாள் பன்மொழி நூல்களையும் நன்கு பயின்று உலகுக்கு உண்மையுணர்த்தி உய்விக்க வேண்டுமெனும் திருநோக்கம் ஒன்றே கொண்டு அரும்பெரு நூல்கள் பல வெளியிட்டு வருகின்றனர். நூல்கள் சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல் முதலிய அழகுகள் பலவுங்கொண்டு பயனுடையதாய்த் திகழ்கின்றன. மேலும் 'சில சொல்லல் தேற்றுஞ்' சீர்மையும் மிளிர்கின்றது. அடிகளார் திருப்பணி நாளும் பெருகி நானிலம் வாழும் நலம் பயக்குமாறு நந்தியிணையடி வழுத்துகின்றோம்.

இந் நூல் விக்ரக ஆராதனை யொன்றினால் மட்டுமே மெய்ப் பொருளினை எய்தி யின்புறலாமென்னும் வாய்மையினையும், இந்நாள் உலகிடைக் காணப்படும் 'இஸ்லாமியம்' முதலிய எல்லா நெறியின் மறை நூல்களும் அவ்வாராதனையினை உற்றுநோக்குவார்க்கு வெளிப்படையாக விளக்கும் தன்மையினையும் அவ்வந் நூல்களின் மேற்கோள்களுடன் விளக்குகின்றது. இதன்கண் அடிகளார் இனிய எளிய தெளிவு நடையில் எல்லாவற்றையும் விளக்குகின்றனர். எடுத்துக் காட்டும் உவமை எல்லார்க்கும் பொருளினை நன்கு பதியச் செய்யும் ஏற்றமுடைத்து. நாற்பத்தைந்து பெருந் தலைப்புக்களால் இந் நூலின்கண் ஆய்வன முற்றும் வரையறுத்துள்ளார்கள். இந் நூல் பலசமயத்தாரையும் ஒற்றுமைப்படுத்தும் பண்பிற்று. நாத்திகக் கொள்கை மிக்குப் பெருகிவரும் இந்நாளில் அதனை மாற்றி ஆத்திகக் கொள்கையினை நிலைநாட்டற்குரிய இந்நூல் காலத்தொடு பொருந்த வெளிவந்ததொன்றாகும். பொதுவாகச் செந்தமிழன்பர்களும் சிறப்பாகச் செந்நெறிச் செல்வர்களும் இன்றியமையாது இதனைக் கற்றுப் பயனெய்துவார்களாக.

'' மரணபயம் தீரும் வழி''

திருவருள் தவநெறி மன்ற வெளியீடு. இந்நூலாசிரியரும் மேலே கூறிய அருளடிகளாரேயாவர். இம் மன்றம் செயன்முறையில் ஆங்காங்குச் செய்துவரும் அருந் தொண்டுகளுடன், எல்லாரும் வாங்கிக் கற்று நற்பயனெய்துமாறு எளிய விலைக்குப் பல நூல்கள் வெளியிட்டுள்ளது. இன்னும் வெளியிட்டுக்கொண்டு வருகின்றது.

பெரும்பாலும் மக்களனைவர்களும் காணப்படும் இப் பருவுடலினை விட்டு உயிர் நீங்கின் அத்துடன் அவ்வுயிர் அழிந்துபட்டதென்றோ, வேறு உலகத்து உறையாதென்றோ, மீண்டும் பிறவாதென்றோ நம்பிப் பெரிதும் வருந்துகின்றனர். அவ்வருத்தத்தினை நீக்கும் அருமருந்தனைய பெருநூலிதுவாகும். எக்காலத்தும் உயிருக்கு அழிவில்லையென்றும், இறைவனை அடையுங்காறும் மீண்டும் மீண்டும் பிறக்குமென்றும், இடையே பல ஆண்டுகள் காணாவுலகத்ததாய் வெவ்வேறுலகங்களில் நுண்ணுடலுடன் வாழுமென்றும், வேறு பருவுடல் எடுக்கும்வரையும் நுண்ணுடலுடன் காணாவுலகத்திருந்து விட்டுப்போன பருவுடலின் தொடர்பான நாடு, மொழி, கல்வி, வழிபாடு, உறவு முதலிய தொடர்புகளுடன் இவ்வுலகத்துக்கு நன்மைபுரிய வேண்டுமென்னும் நன்னோக்குடன் அவ்வுலகில் தெய்வ வாணைக்குட்பட்டு உலவு மென்றும், தக்க இயக்குநர் வாய்க்குமேல் உட்புகுந்து எழுத்தாலும் குரலாலும் தன் கருத்தை வெளிப்படுத்துமென்றும் உலகிடை உண்மையாக நிலவிவரும் மெய்க்கொள்கையினை இந்நூல் விளக்குகின்றது. இவ்விளக்கத்தால் மக்கட்குத் தெய்வ நம்பிக்கையும், நல்லொழுக்கமும், நல்வினைபுரிதல், நன்னெறிப் படர்தல் முதலிய வாழ்க்கைச் சிறப்பும் வந்தெய்தும் என்பது தொருதலை. இதன்கண் 32 பெருந்தலைப்புக்களும், சில சிறு தலைப்புக்களும் காணப்படுகின்றன. அவையனைத்தும் பெரும் பயன் தருவனவே. எளிய இனிய நடை. இதனையும் எல்லாரும் வாங்கிக் கற்றுப் பெரும் பயன் எய்துவார்களாக.

" திருச்செங்கோட்டுத் தோத்திரமஞ்சரி "

இந் நூலாசிரியர் திருப்போரூர் முருகவேளால் ஆட்கொள்ளப்பட்ட அந்தணப் பெரியாராவர். ஆண்டிலிளைஞரேனும் அருளறிவில் முதியராவர். இவர்கள் வாயிலாக அருள் விளக்கமும், அருளுணர்த்த உரைக்கும் அருந்தமிழ்ப்புகழ்ப் பாக்களும் வெளிவருவன கண்டுங் கேட்டுமுளார், ஈண்டிய பெரும் பற்றுக்கொள்வர் காண்டற்கரிய கடவுளிடத்து. பண்டுதொட்டு இன்றுகாறும் வியத்தகு அருள் நிகழ்ச்சிகள் இடையிடையே ஆங்காங்கு நிகழ்வன தெய்வவுண்மையினைத் தேற்றுவதற்கே யாம் என்றல் துணிபு. அம்முறையில் இந்நூலாசிரியர் 'மறைக்குலமணி-அருட்கவி **சேதுராமனா**ரவர்கள் ஆவர். இவர்கள் 15—5—1957 இல் திருச்செங்கோட்டைக் கண்டு வழிபட்டனர். அப்பொழுது குறியாக்கவியாகத் திருவருளால் பாடப்பட்டவை இதன்கண் காணப்படும் தெய்வச் செழும் பாடல்கள்.

இதனை நேரிற் கண்டு கரைகடந்த இன்பம் எய்திய திருச்செங்கோடு **ஸ்ரீ அருணகிரிநாதர் சட்டி வழிபாட்டுச் சங்கத்தார்** இப்பொழுது வெளியிடுகின்றனர். பல தலைப்புக்களாகக் கூடி மூப்பத்தெட்டுத் திருப்பாடல்களுள்ளன. இப்பாட்டுக்களுக்கு நூலாசிரியரவர்களே செவ்விய குறிப்புரை கண்டுள்ளார்கள். அது பயில்வார்க்குப் பெருந்துணை புரியும் நல் விளக்கமாகும். இவ் வெளியீட்டுக்கு வேண்டுவ செப்பஞ் செய்து அச்சிட்டமைத்தோர் சிவத்திரு, தணிகைமணி ராவ் பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் எம். ஏ., இஃது இலவச வெளியீடு. கிடைக்குமிடம்: 292, லிங்கச் செட்டித் தெரு, சென்னை - 1. தணிகை மணி அவர்கள் அழகியதொரு முகவுரை அளித்துள்ளார்கள். சிறந்த கந்தரலங்காரப் பாடல்கள் எட்டுச் சேர்க்கப்பட்டுள்ளன.

பொதுவாகச் செந்நெறிச் செல்வர்களும் சிறப்பாகத் திருமுருகன் அன்பர்களும் இதனை வாங்கி நாளும் ஓதி நன்னலமெய்துவார்களாக.

செய்திகளும் குறிப்புக்களும்

க. வரலாறு அறிய வழிகாட்டும் அகராதி

சென்னை அரசினரின் வேண்டுகோட் கிணங்கி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு தமிழ் அகராதியைத் தொகுக்க முன்வந்துள்ளது. இவ்வகராதி மற்ற அகராதிகளைப்போலின்றிப் புதிய முறையில் தொகுக்கப்படும். அஃதாவது, இதுவரை வெளியிடப்பட்டுள்ள அகராதிகளையும் கல்வெட்டுச் சான்றுகளையும் ஆராய்ந்துவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் திராவிட மொழிப் பிரிவு ஆராய்ச்சி யாளாகள், வரலாற்று அடிப்படையில் இவ்வகராதியைத் தொகுப்பார்கள். இதற்கான செலவைச் சென்னை அரசு ஏற்கும் என்றும் சொல்லப்படுகிறது.

குறிப்பு: மொழி, வரலாறு இன்னபிற துறைகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆற்றிவரும் பணி அனைவரும் அறிந்ததே. இப் பல்கலைக் கழகத்தின் முயற்சிகள் வெற்றிபெற்று அதன் பயனைத் தமிழகம் விரைவில் நுகரும் என எதிர்பார்க்கிறோம்.

உ. தமிழில் கலைச்சொல் ஆக்கப்பணி

அரசியல், பொருளாதாரம், வரலாறு, உடற்கூறு, நிலநூல் என்னும் ஐந்து முதன்மையான பொருள்களில் வரும் பிறமொழிச் சொற்களைத் தமிழில் ஆக்கி, அதனைப் போதனை மொழியாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சென்னை அரசினர் 'கல்லூரித் தமிழ்க் குழு' மூலம் இதனைச் செயல்படுத்த முன்வந்துள்ளனர். இப் பணியின் முதற்படியாகப் பதினான்கு பொருள்கள் பற்றிய தமிழ்ச் சொற்களைத் தொகுத்து, கோவை அரசினர் கலைக் கல்லூரியில் அவற்றைப் போதிக்கும் முறையை ஒரு முன்னேற்பாடாகச் செய்ய முன் வந்துள்ளனர். இக் கலைச்சொற்கள் அகரவரிசையின் முதற்றொகுதி அடுத்து வரும் ஜூன் திங்களில் வெளிவரும் எனச் சொல்லப்படுகிறது.

குறிப்பு: சென்னை அரசினரின் இத் தமிழ்ப் பணியினைப் பாராட்டுகிறோம். அவர்தம் பணி சிறந்து, விரைவில் தமிழகமெங்கும் தமிழ் மணங்கமழும் என எதிர்பார்க்கிறோம்.

௩. பண்டித சவரிராயரின் நூறாவது பிறந்தநாள் விழா

மறைந்த தமிழ்ப்பெரும்புலவரான பண்டித சவரிராயர் அவர்களின் நூறாவது பிறந்தநாள் விழா அண்மையில் தூத்துக்குடி நகராண்மைக் கழகமண்டபத்தில் நடைபெற்றது. விழாவிற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்கள் தலைமை தாங்கிப் பண்டிதரின் உருவப்படத்தைத் திறந்துவைத்து, அவருடைய தமிழ்ப்பற்றினையும் பிறமொழிப் பயிற்சியினையும் சிறப்பித்துப் பேசினார். திருவாளர்கள் பிராசிஸ் மொரே, வித்துவான் அருணாசலக் கவுண்டர், அ. சீனிவாசராகவன் ஆகியோர் திரு சவரிராயரின் ஆராய்ச்சி, தமிழறிவு இன்ன பிறபற்றிப் பேசினர்.

குறிப்பு: இங்ஙனம் மறைந்த மாண்புறு புலவர்களின் நினைவு நாட்களைக் கொண்டாடுவதும் கொண்டாடச் செய்வதுமான பணிகள் நாட்டையும் மொழியையும் வளப்படுத்தும் நற்பணிகளாகும். இவ் விழாவினை ஏற்பாடு செய்த தமிழன்பர்களைப் பாராட்டுகிறோம்.

*

௬. குழந்தை இலக்கியங்களுக்குப் பரிசு

குழந்தை இலக்கியங்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் ஆறுவது திட்டத்தை இந்திய அரசினர் வெளியிட்டுள்ளனர். இதன்படி 1000 ரூபாய் பரிசுகள் 15-ம், 500 ரூபாய் பரிசுகள் 15-ம் வழங்கப்படும். இவற்றுள் ஒவ்வொரு பரிசுகள் தமிழ்ப் புத்தகங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. 1958—60 ஆண்டுகளில் வெளிவந்த புத்தகங்கள் அல்லது கையெழுத்துப் படிகள் இப்பரிசுக்கென ஏற்றுக்கொள்ளப்படும் எனச் சென்னைக் கல்வித் துறையினர் அறிவித்துள்ளனர்.

குறிப்பு: குழந்தை இலக்கியங்கட்கு அங்ஙனம் ஆதரவு நல்கும் இந்திய அரசினரைப் பாராட்டுகிறோம். இந்திய அரசினரைப் பின்பற்றி இம் மாநில அரசினரும் திட்டம் வகுப்பார்களாயின் தமிழில் மேலும் பல குழந்தை இலக்கிய நூல்கள் வெளிவர வழிகோலியவர்களாவார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விழைகிறோம்.

திருவாட்டி வை. மு. கோதைநாயகி அம்மையார் மறைவு

நூற்றுக்கு மேற்பட்ட நாவல்களை எழுதிப் புகழ்பெற்றவரும், 1932-ல் நாட்டு விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறை ஒறுப்புக்குள்ளானவரும் ஆகிய திருவாட்டி. வை. மு. கோதைநாயகி அம்மையாரவர்கள் தமது 58 ஆவது அகவையில் கடந்த 20—2—60 இல் இறைவன் திருவடி நீழலை அடைந்தனர்.

குறிப்பு: எழுத்துலகில் அம்மையார் ஆற்றிய பணியை நாடு நன்கறியும். அத்துடனில்லாது நாட்டு விடுதலையில் நாட்டம் செலுத்தியதும், 'ஜகன்மோகினி' என்னும் திங்களிதழைத் திறம்பட நடத்தி வந்தமையும் அம்மையாரின் ஆற்றலை வெளிப்படுத்துவன. இவர்தம் மறைவுச் செய்தியறிந்து வருந்துகிறோம் அவர்களை இழந்து வருந்தும் அவர் கணவருக்கும் உற்றார் உறவினர்க்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இறையடி எய்திய
செல்லூர்க்கிழார் இராமசாமி பிள்ளை

இவர்கள் 9—3—1960 இல் இறையடி எய்தியமை அறிந்து பெரிதும் வருந்துகின்றோம். முன் சில ஆண்டுகள் சென்னையில் கழகப் புலவராக விருந்து பல நூல்கட்கு உரைகண்டு அரும்பணி புரிந்துள்ளார்கள். 1957 ஏப்பிரல் முதலாகப் பக்கவாத நோயினால் பீடிக்கப்பட்டு வீடு மட்டுமாயிருந்தனர். விரிவான வரலாறு செல்வியில் பின்வரும். அவர் தம் ஆருயிர் இறையடி இன்பம் எய்துமாக. அவர்தங் குடும்பத்தார்க்குக் கழகத்தாரின் கையறுநிலைப்பரிவும் ஆறுதலுரையும் உரியவாகுக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

மங்கலகிழார்

திரு. குப்புசாமி முதலியார்



சிலம்புச் செல்வர்

திரு. ம. பொ. சிவஞான கிராமணியார்